Regd. No. M. 4593. KUDI ARASU 16 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.

தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு. மாகாண மாநாடு மலர்

மாலை 18 ஈரோடு 29-9-1945 புரட்டாசி மீ 13உ மலர் 51

தென் இந்திய நலஉரிமைச் சங்கமென்று தமிழிலும், சவுத்இந்தியன் லிபரல் பெடரேஷன் என்று ஆங்கிலத்திலும் பெயர் இருந்துவந்து பொதுவாக ஜஸ்டிஸ் கட்சி என்றும் பார்ப்பனரல்லாதார் கட்சி என்றும் அழைக்கப்பட்டு வந்து 1944-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 27ந் தேதி சேலத்தில் கூடின 16வது S. I. L. F. ஜஸ்டிஸ் மாகாண மாநாட்டில் "திராவிடர் கழகம்" என்றும், ஆங்கிலத்தில் "திராவிடியன் பெடரேஷன்" என்றும் முறைப்படி பெயர் மாற்றப்பட்டு,

## திருச்சியில் 29-9-45ல் கூடிய

### 17-வது திராவிடர் கழக மாகாண மாநாட்டில்

### தலைமை வகித்த

# பெரியார் ஈ. வெ. ராமசாமி

## அவர்களின் தலைமை உரை.

தோழர்களே! தாய்மார்களே!!

ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டில் இது நாலாவது தடவை நான் தலைமை வகிப்பதாகும். கட்சியின் லீடர் கட்சியை நடத்துகிறவன் என்கின்ற தன்மையில் இப்படி நான்கு தடவை நான் தலைமை வகிக்க வேண்டியதாயிற்று.

### நான் தலைமை ஒப்புக்கொண்ட காரணம்

சென்ற தடவை சேலம் மாநாட்டில் நான் மாநாட்டிற்கு இப்படி தலைமை வகிப்பது இதுதான் கடைசி தடவை என்று சொன்னேன். இப்போது நான் மறுபடியும் தலைமை வகிக்க நேரிட்டதற்கு சமாதானம் சொல்லியாக வேண்டும்.

என் தலைமையைப் பற்றி நான் உங்களுக்கு சமாதானம் சொல்ல வேண்டும் என்கின்ற ஆவல் இல்லாவிட்டாலும் பொதுவுக்கு நான் சொல்லி ஆகவேண்டும். ஆகவே அதற்கு சமாதானம் 2, (இரண்டு); ஒன்று யாரை உத்தேசித்து, எனக்குப் பின் யார்? எப்படி நடப்பது? மேலால் எனது நிலை என்ன? என்பவைகளைப் பற்றி நான் என்ன கருத்துக் கொண்டிருந்தேனோ அது சேலத்திற்குப் பின் மாறிவிட்டதாகக் கருதுகிறேன்.

அதாவது நான் யாரிடம் இயக்கப் பொறுப்பையே விட்டுவிடலாம் என்று கருதினேனோ அந்தக் கூட்டம் இந்தக் கட்சியில் இயக்கத்தில் இருந்தே கொள்கையிலிருந்தும்கூட விலகி வெளியாகிவிட்டது. வெளியாகிவிட்டது மாத்திரமல்லாமல் வேறு கட்சி ஒன்று அமைத்துக்கொண்டதாகப் பாசாங்கு செய்துகொண்டு நம் கட்சியின் கொள்கைகளையும், திட்டங்களையும் கவிழ்த்து கட்சியே நசித்துப்போகும்படி செய்ய கட்டுப்பாடான வேலை செய்யத் துவங்கிவிட்டது. அப்படி அக்கூட்டம் செய்வதுதான் நம் மக்களின், உங்களில் பெரும்பாலோரின் இஷ்டம் என்று இருக்குமானால் அதன் போக்கில் நான் விட்டுவிட்டு சொன்னபடியே நடந்திருப்பேன். தலைமைப் பதவியை விட்டுவிடத்தயாராகவேதான் நான் எனது தலைமை உரையைக்கூட தயார் செய்துகொண்டுவரவில்லை என்பதோடு எதுவும் நிகழ்த்தவும் இல்லை.

சுமார் 25 வருஷகாலமாக ஜஸ்டிஸ்கட்சிநாட்டில் இருந்துவந்து ஒரு புது உணர்ச்சி மக்களுக்குள் எழுவதற்குக் காரணமாய் இருந்து அதற்கு பலமான எதிரிகள் ஏற்பட்டு அந்த எதிரிகளால் கடுமையான தொல்லை அனுபவித்துக் கொண்டு கஷ்ட நிலையில் இருந்து வந்திருக்கிற சேதி நாம் அறிந்ததேயாகும். என்றாலும் இப்போது இது நாட்டில் மற்ற எந்தக் கட்சிக்கும் இளைத்ததாய் இல்லாத ஒரு உணர்ச்சியைப் பெற்று உற்சாகமான நிலையில் இருக்கிறது. திராவிட அதிகாரிகள் முதல் இளைஞர்கள், மாணவர்கள் வரை கட்சி உணர்ச்சி புகுந்திருக்கிறது. கட்சிக்குப் பயன்உள்ள (ஏன்) நல்ல கொள்கைகள் அமைந்திருக்கின்றன. வரப்போகிற காலம் சற்று நெருக்கடியாக இருப்பதோடு இந்த சந்தர்ப்பத்தில் ஏமாந்திருந்துவிட்டால் மேலால் வெகு காலத்திற்கு மாற்றம் ஏற்பட வகை இல்லாததாக ஆகிவிடும் போலிருக்கிறதால் அதை சமாளிக்க. நம்மிலிருந்து ஒரு மாதிரியான ஆள்கள் விலகிவிட்டதால் வெறுப்போ சலிப்போ கொள்ளுவதற்கு இடமில்லாமல் நல்ல வேலைசெய்ய உண்மையாளருக்கு வசதிஇருக்கிறது. எனவே இந்த நிலையில் அடியோடு விலகிவிட வேண்டிய அவசியமில்லை என்று கருதினேன்.

இரண்டாவது சமாதானம் என்னவென்றால்:-

ஒவ்வொருதடவையும் இப்படிப்பட்ட மாகாண மாநாடுகளில் நானே தலைமைவகிப்பது என்பது எனக்கு சலிப்பாக இருக்கிறது என்பதோடு, உங்களுக்கும் சலிப்பாக இருக்கவில்லை என்று நான் சொல்ல வரவில்லை. உங்களுக்கும் சலிப்பாக இருக்கலாம். ஆனால் ஜில்லாக்கள்தோறும்நான் உங்களால் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதன் காரணமாக நீங்கள் சலிப்பு இல்லை என்று சொன்னாலும்கூட எனக்கு இது உண்மையில் சலிப்பாகவே இருக்கிறது. சலிப்பு மாத்திரமல்லாமல் கூச்சமாகவும் இருக்கிறது. ஆகையால் வேறு யாரையாவது இந்த மாதிரியான மாநாடுகளின்போது தெரிந்தெடுக்கும்படி நான் கட்டாயப்படுத்தி இருக்கலாம். ஆனால் கட்சி விதிகளில் மாநாட்டில் தலைமை வகிப்பவர்களே கட்சியை நடத்துகிறவர்களாக இருக்கவேண்டும் என்று இருக்கிறபடியால் கட்சிக் கொள்கை திட்டம் ஆகியவைகளுக்கு கட்டுப்பட்டு அதை மனப்பூர்வமாக ஏற்று மற்றவர்களுக்கு வழிகாட்டத் தகுந்த மாதிரியாக நடக்கும் ஒருவரை, அதுவும் முழு நேரமும் சாவகாசம் பெற்று தொண்டாற்றும் ஒருவரை கட்சியின் தற்கால நிலை தேவைப்படுகிறபடியால், கட்சி விதிகள் திருத்தப்படாத நிலையில் திடீரென்று ஒருவரைத் தெரிந்தெடுக்க முடியவில்லை என்று பொறுப்புள்ள தோழர்கள் பலர் கருதியதால் நான் ஒப்புக்கொள்ளவேண்டியதாயிற்று.

இப்போதும் நான் சொல்லுகிறேன் மாநாட்டு நடவடிக்கைகளில் விதிகள் திருத்தமும் வரலாம் என்று கருதுகிறேன், அதோடு பல தீர்மானங்களும் வரலாம் என்றும், அவற்றிற்கேற்றபடி மாறுதல் ஏற்படும் என்றும் கருதுகிறேன்.

## இந்த மாநாடு

ஜஸ்டிஸ் கட்சியின் பேரால் இன்று கூடும் இந்த மாநாடு இதுவரை கூடி இருக்காத முறையில் மிக்க அமைப்பு வலுவான அங்கத்தினர் • கட்டுப்பாடான நிலையில் கூடி இருக்கிறது என்று மகிழ்ச்சியோடு வன்மையாய்க் கூறுகிறேன்.

தோழர்களே இன்று ஜஸ்டிஸ் கட்சிக்குத் தமிழ்நாட்டில் மாத்திரம் 35000 அங்கத்தினர் சேர்ந்து இருக்கிறார்கள். இவர்கள் அத்தனைபேரும் சந்தாக் கொடுத்து கையெழுத்திட்டு அங்கத்தினர்களானவர்கள். ஒவ்வொருவர் கையெழுத்தும் பதிவு புத்தகமும் இருக்கின்றன. அது போலவே ஜஸ்டிஸ் கட்சிக்கு தமிழ்நாட்டில் மாத்திரம் 275 கிளை ஸ்தாபனங்கள் முறைப்படி அமைக்கப்பட்டிருக்கின்றன. இனியும் 100, அல்லது 150 கிளைகள் ஏற்பட சாதாரணமான வசதி இருக்கிறது. இந்த மாநாட்டுக்குப் பிறகு கேரள, ஆந்திர, கன்னட நாடுகளில் அவசியம் வேலை துவக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதோடு நான் அங்கு சென்று வந்ததில் கட்சிக்கு நல்ல ஆதரவிருக்கிறது என்பதையும் உணர்ந்தேன் எனவே இந்தமாதிரியாக அங்கத்தினர்களும், கிளைகளும் உணர்ச்சிகளும் ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்ட காலம் முதல் இன்று வரை இருந்து இருக்காது என்னலாம். ஆதலால்தான் மிக்க வலுவான முறையில் மாநாடு கூடி இருக்கிறது என்கின்றேன்.

இப்படிப்பட்ட வலுவுடன் கொழுந்துவிட்டு எரியும் உணர்ச்சியுடன் இருக்கும் இந்தக் கட்சியை எப்படி பயன்படுத்திக்கொள்வது? எப்படி எப்படி பயன் உண்டாகும்படி நடத்துவது? என்பதுதான் இந்த மாநாடு கூடி இருப்பதற்குள்ள காரணமாகும்.

சென்ற வருடம் சேலத்தில் கூடிய மாநாட்டின் கட்டளைப்படி இன்றைக்கு 6-மாதத்திற்கு முன்பாகவே ஒரு மாகாண தனி (ஸ்பெஷல்) மாநாடு கூடி இருக்க வேண்டியது அவசியமாகும். ஆனால் கட்சிக்கு அங்கத்தினர்கள் சேர்ப்பதும், கிளைகள் ஸ்தாபிப்பதும்ஆன காரியங்கள் உற்சாகத்தோடு தொடர்ந்து நடந்து கொண்டிருந்ததாலும் ஒன்றின் மேல் ஒன்றாக பல பிரச்சினைகள் நாட்டில் தோன்றிக்கொண்டு வந்ததாலும், மாநாடுகூட்ட நாள் கடந்துவந்தது தவறாகக் காணப்படாததால் ஒரு வருஷம் தாண்டி விட்டோம்.

## இதன் முதல் வேலை

**இப்போது இந்த மாநாட்டின்** முதல் தீர்மானமாக நாம் செய்ய வேண்டியது சேலம் மாநாட்டில் ஏகமனதாகத் தீர்மானித்து அமுலுக்கு கொண்டுவர அனுமதிப்பதற்குஆக நிபந்தனை ஏற்படுத்தி அது முடிய சிறிதுகாலம் தவணை கொடுத்திருந்த தீர்மானத்தை அனுமதிக்க வேண்டியதேயாகும். அமுலுக்குக்கொண்டு வருவதற்கு ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகள் பாராட்டத் தகுந்த முறையில் உங்களால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அவைகளில் தஞ்சை, கோவை, சேலம், திருச்சி ஆகிய ஜில்லாக்கள் மிகமிக பாராட்டத் தக்கவை ஆகும். மற்ற ஜில்லாக்களும் அவற்றின் குறைந்தபட்ச நிபந்தனைகளுக்கு மேலாகவே நிறைவேற்றி இருக்கின்றன என்றே சொல்லலாம். ஆகவே காலமும் நிபந்தனைகளும் பூர்த்தி ஆகிவிட்டதால் சேலம் தீர்மானம் உங்களுடைய முழு ஆதரவுடன் அமுலுக்கு அனுமதித்து விட்டதாகப் பிரகடனப்படுத்தப்பட்டுவிடும் என்பதில் ஆட்சேபனை இருக்காது என நம்புகிறேன்.

## பிறகு என்ன செய்வது?

ஆனால் அதற்கப்புறம் என்ன செய்வது? என்பது பற்றி முடிவு செய்வது இம்மாநாட்டிற்குத் தவிர்க்கமுடியாத கடமையும், முக்கியமான பொறுப்பும், ஜாக்கிரதையாகச் செய்யவேண்டியகாரியமுமாகும். அப்படிப்பட்டமுடிவு வெறும் உங்களுடைய உற்சாகத்தால் செய்யக்கூடியதாய் இருந்தால் பயனளிக்காது என்பதோடு நம்மைக் கேலி செய்யவும் முட்டாள்களாக்கவும் எதிரிகளுக்கும் உலகத்தவர்களுக்கும் பயன்பட்டுவிடும். ஆதலால் செய்யும் முடிவானது உங்கள் உறுதியும், நாணையமும், ஏற்படும் பலனை அனுபவிக்கும் துணிவும், பலமும் தகுதியும் ஆகியவற்றைப் பொறுத்ததாகும். நாம் இன்று இக்கூட்டத்தில் வீண் கோஷங்கள் போட்டுக்கொண்டு பொறுப்பும், இலட்சியமும் இல்லாத வெறும் ஆடம்பர உற்சாகக்காரர்களாகவோ, சுயநலக்காரர்களாகவோ, வேஷதாரிகளாகவோ, விளம்பரக்காரர்களாகவோ வந்து கூடி இருக்க இல்லை. ஒரு மாபெரும் **சமுதாயத்தில் இருந்து வேறுபட்டு**

ஒரு தனிப்பட்ட சமுதாயமாக விலகி, சில தனிப்பட்ட கொள்கைகள், திட்டங்கள் கொண்டவர்களாக இருக்கிறோம். இந்த நிலைமையை நாமே நமது சொந்தத்தில், நமது பொறுப்பில் ஏற்பாடு செய்துகொண்டு,நாமே உண்டாக்கிக்கொண்டவர்களாக, ஸ்தாபகர்களாக, இருக்கிறோம். இதை ஒப்புக்கொள்ளாதவர்களையும், எதிர்ப்பவர்களையும் சிறிதும் லட்சியம் செய்யாமல் அவர்கள் இல்லாமலே நாம் காரியங்களைச் செய்யலாம், என்கின்ற தன்மையில் பட்டுக்கொண்டிருக்கிறவர்களாயிருப்பதால் நமக்கு உள்ள பொறுப்பு மிக்கப் பெரிதும் நம் தலையிலேயே எல்லாப் பொறுப்பும் இருக்கிறது என்கின்ற நிலையில் இருக்கிறோம். ஆதலால் நமது வாழ்வையே ஜாமீன் (பணையம்) கட்டவேண்டிய தன்மையில் நம் பொறுப்பு இருப்பதை நினைத்துக்கொண்டு நாம் இனி அடுத்தபடி என்னசெய்வது? என்பதை தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

### நம் உரிமையும் நிலையும்

நமக்கு நம் கொள்கைகளில், லட்சியத்தில் உள்ள அவசியமும், உறுதியும், அதற்குஆக எதையும் பலிகொடுக்கத் தயாராயிருக்கிறோம் என்கின்ற துணிவும்தான் ஆதரவும் உதவியும் சாதனமுமாய் இருக்கிறது. நமக்கு எதிர்ப்பு அதிகம். கூடவே இருந்து காரியத்தைக் கெடுக்கும் தந்திரக்கூட்டம் அதிகம். ஏன்எனில் மிக்க செல்வாக்கும், பலமான அஸ்திவாரமும், ஏராளமானஎதிர்ப்பு அக்கரை (Vested interests) உள்ள மக்களையும் கொண்டதொரு ஸ்தாபனத்துக்கு, அதன் கருத்துக்கு, நடத்தைக்கு, எதிர்ப்பாக இருக்கிறோம். எதிர் நீச்சலும், செங்குத்தான குன்றின்மேல் பாரமான குண்டை மேலே கொண்டுபோக உருட்டும் வேலையும்போன்ற அபாயகரமான காரியத்தில் ஈடுபட்டு இருக்கிறோம். வாழ்வு அல்லது சாவு என்று அறுதியிடும்படியான கஷ்டத்தில் இருக்கிறோம். நம் பாதையில், பிரயாணத்தில், முழத்துக்குமுழம், அங்குலத்துக்கு அங்குலம் தட்டுத்தடுமாறி விழும்படியான கரடு முரடான பாதையில் செல்லவேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆதலால் நன்றாய் ஆலோசித்து நம்மைத் திடப்படுத்திக் கொண்டு நம் வேலையை முடிவுசெய்ய வேண்டும். "உற்சாகமாக இரு" "தைரியமாக இரு" என்கின்ற அறிவுரைகள் சிறந்தவைகளேயாகும். ஆனால் அளவுக்குமீறிய உற்சாகமும் கண்மூடித்தனமான துணிவும் பயனளித்துவிடாது என்பதோடு எதிர்ப்பான பலனைக் கொடுக்கக் கூடியதாகவும் ஆகிவிடலாம். ஆகவே இன்று செய்யும் முடிவுகள் நல்லதீர்க்க ஆலோசனையுடன், சுதந்தரமான எண்ணத்துடன் இருந்து, நல்ல எண்ணத்தின் மீது செய்யப்படவேண்டியதாகும். செய்த பிறகு அம்முடிவுக்குஒவ்வொருவரும் நாணையமான, நிபந்தனை அற்ற பின்பற்றுபவர்களாக இருக்கவேண்டும். கட்டுப்பாடும், களங்கமற்ற உள்ளமும், கீழ்ப்படியும் தன்மையும் இருக்கவேண்டும். "முடிவு செய்யத்தான் நமக்கு உரிமை, காரியம் செய்வது மற்றவர்களது கடமை" என்று கருதி பொறுப்பை ஏற்கத் தயாராய், தகுதியாய் இல்லாமல், முடிவில் கலந்து கொள்ளுபவர்கள் நாணையவாதிகளாகமாட்டார்கள் என்பதோடு வஞ்சகர்களாவார்கள் என்றும் கூசாமல் கூறுவேன்.

தோழர்களே, நாம் இந்த நாட்டு மக்கள். இந்த நாடு நம்முடையது. சரித்திரம் கண்ட காலத்திற்கு முன்பிருந்தும் நாம் இந்த நாட்டில் உரிமையோடு மேன்மையாய் வாழ்ந்தவர்கள். எனவே இந்த நாடு நமதுஆட்சியில், ஆதிக்கத்தில், ஆணையில் இருக்க வேண்டும் என்று விரும்புவதும், முயற்சிப்பதும் நமக்குப் பிறப்புரிமையும் சுயமரியாதையுமாகும். இதை உணராதவன் எவனும் நம் கூட்டத்தில் மனிதன் என்று மதிக்கத் தகுதி அற்றவனேயாவான். இந்த நாட்டில் மானத்தோடு வாழத் தகுதிஅற்றவனே ஆவான்.

ஆனால் நாம் என்ன நினைக்கிறோம்? இந்த நாட்டில் நம் நிலைமை என்ன? நம் வாழ்வின் தன்மை என்ன? சமுதாயத்தில், பொருளாதாரத்தில்,அரசியலில் நம் இடம் எது? சமயம், சுமய ஆதாரம் என்பவை நம்மைப்பற்றி என்ன சொல்லுகின்றன? அரசாங்கம் நம்மை எப்படிநடத்துகிறது? நாகரீக பிரிட்டிஷ் அரசாங்கத்தின் 200-வருஷ ஆட்சியில் நாம் அடைந்த மேன்மை என்ன? நம் கல்வி, அரசாங்கப் பிரதிநிதித்துவம், அதிகாரப் பங்கு ஆகியவைகளில் நம் நிலை என்ன? இவைகளுக்கு எல்லாம் நம் "தகுதி" என்ன? என்பவைகளை யோசித்துப் பாருங்கள். இவற்றில் நமக்குள்ள குறைபாடுகளும், இழிவுகளும், தகுதி இன்மை என்பவைகளும் ஏன்? எதனால்? கோவில்களைக் கட்டியது யார்? நாம், மடங்கள் கட்டியது யார்? நாம், சத்திரங்கள் கட்டியது யார்? நாம், பள்ளிக்கூடங்கள் கட்டியது யார்? நாம், அரசியல் சுதந்திரத்துக்கு என்று கடுமையான திட்டங்களை ஏற்று பணம் கொடுத்ததும், பல தொல்லைகளுக்கு ஆளானதும் யார்? பெரிதும் நாம், அப்படிப்பட்ட நமக்கு இன்று அவைகளில் உள்ள இடம் என்ன? ஆதிக்கம் என்ன?

சிதம்பரம் கோவில் தீட்சதர்களுக்குச் சொந்தம், மடங்கள், ஜியர் சங்கராச்சாரியார்களுக்குச் சொந்தம், "தமிழர்" மடங்களில் பார்ப்பனர், பார்ப்பன வக்கீல்கள் ஆதிக்கம், நேஷனல் காலேஜுகளுக்கு லட்சக்கணக்கில் பொருளுதவி செய்தோம், அவை ஆரியர் ஆட்சியில், சத்திரங்களிலோ பார்ப்பனருக்கே. சாப்பாடும் தனி இடமும், மந்திரிசபைகளில் பார்ப்பனர்களே பிரதமர்கள் என்கிற நிலையில் இருக்கின்றனவே இவை ஏன்? 100க்கு மூன்று பேரே பார்ப்பனர் இருந்தும் சர்க்கார் 100க்கு பதின்மூன்று பேருக்கு ஓட்டு உரிமை கொடுத்து இருந்தும் தோழர்கள் ராமசாமி முதலியாரும், சண்முகம் செட்டியாரும், முத்தையா முதலியாரும் தோற்றுப்போனது ஏன்? தேர்தலுக்கு லட்ச, லட்ச ரூபாயாகச் செலவுசெய்தும் பொப்பிலி ராஜாவும், பெத்தாபுரம் ராஜாவும், ராமநாதபுரம் ராஜாவும் தோற்றுப் போனது ஏன்?

என்பனவாகியவைகளை சிந்தித்துப்பாருங்கள். நம் மானமற்ற உணர்ச்சியற்ற தன்மையைக் காட்டவும், நம் இழிநிலையைக் காட்டவும், இவை போதாதா என்று

கேட்கின்றேன். நம்மில் செல்வவான்கள், புத்திசாலிகள், மேதாவிகள், படித்தவர்கள் இல்லாமலா போய்விட்டார்கள்? எத்தனையோ பேர் இருந்தும் நம்மவர் ஒரு சிறு கூட்டத்தாருக்கு அடிமைப்பட்டு, பயந்து அடங்கிக் கிடக்கின்றதை யார் மறுக்கமுடியும்? ஆகவே தோழர்களே இந்த மாநாட்டில் முக்கியமாய் யோசித்து முடிவுசெய்யவேண்டிய காரியங்களில் இதைத்தவிர வேறு என்ன காரியம் முதலாவதாக இருக்க முடியும்? என்பதோடு இதற்குஆக அல்லாமல் வேறு எந்தக் காரியத்திற்கும் இப்படிப்பட்ட கட்சியும் இந்த மாநாடும் தேவை இல்லை என்றும் என்போன்றவர்களுக்கும் உங்களைப்போன்ற தீவிர உணர்ச்சி உள்ள வீரப்படை போன்றவர்களுக்கும் வேலை இல்லை என்றும் சொல்லுவேன்.

அதனாலேயே நாம் இனியும் வீணுக்குழைத்தவர்களாக ஆகாமல் ஒரு முக்கியமான, புரட்சிகரமான ஒரு காரியத்தைச் சாதிக்க, இல்லாவிட்டால் அழிந்துபோக இன்று வழிகோலவே இங்குகூடி இருக்கிறோம்.

### இதற்கு என்ன செய்வது?

நாம் யார்?, நம் நாடு எது?, நம் சமயம் எது? என்பனவாகிய விஷயங்களைப் பற்றி எல்லாம் சென்னை, திருவாரூர் ஆகிய மாகாண மாநாடுகளிலும் மற்றும் நூற்றுக்கணக்கான ஜில்லா தாலுக்கா மாநாடுகள் கூட்டங்கள் ஆகியவற்றிலும் விளக்கிவிட்டு நம் குறைபாடுகளையும் முன்னேற்றத் தடைகளையும் நீக்குவதற்கு ஆக சில கொள்கைகளையும் பல திட்டங்களையும் சேலம் மாநாட்டில் தீர்மானித்து இருக்கிறோம். அவை இன்று நம்மில் ஏகமனதான—ஒருமுகமான அபிப்பிராயமாக விளங்குகின்றன. அவைகளில் அபிப்பிராய பேதமுடையவர்களும், அவற்றைத் தாங்கமுடியாதவர்களும் தாங்களாகவே விலகிக்கொண்டு விட்டார்கள். இந்தத் திட்டங்களை வாய்ப்பேச்சளவில் நாம் பேசிக்கொண்டு இருந்த வரையில் நம்கூடவே இருந்துவிட்டு, நாம் சொல்லுவதற்கெல்லாம் ஒத்துத் தாளம் போட்டுக்கொண்டும் இருந்துவிட்டு, காரியத்தில் நடத்திக் காட்டவேண்டிய அவசியம் வந்த உடன் சிலர் விலகிக்கொண்டு விட்டார்கள். இந்தச் சமயத்தில் அவர்கள் விலகினதை அபிப்பிராய பேதம் காரணமாகவோ கொள்கை பிடித்தமில்லாமலோ விலகினதாக எவருமே கூற முடியாது. ஏன் எனில் நாம் செய்யவேண்டிய வேலை என்ன? கொள்கை என்ன? திட்டங்கள் என்ன? நாம் உன்ன செய்யப் போகிறோம்? என்பவை நான் சென்னை மாநாட்டுத் தலைமை உரையிலும், திருவாரூர் மாநாட்டுத் தலைமை உரையிலும் சொல்லப்பட்டவைகளும், திருவாரூர் மாநாட்டில் இப்போது விலகிவிட்டவர்கள் உள்பட பதினாயிரக்கணக்கான மக்களால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டவைகளுமே தவிர, புதிதாக சொல்லப்பட்டவைகளோ, தீர்மானிக்கப்பட்டவைகளோ அல்ல என்பது யாவரும் அறிந்ததேயாகும். புதிதாகத் தீர்மானிக்கப்பட்டது என்ன என்றால் அக்கருத்துக்களையும், தீர்மானங்களையும் அமுலுக்குக் கொண்டுவருவதுஎன்பது மாத்திரமேயாகும். ஆதலால் அத்தீர்மானம் ஏற்பட்டவுடன் அதன்படி நடக்கமுடியாதவர்கள் விலகிவிட வேண்டியதாயிற்று என்பதில் அதிசயமொன்றுமில்லை. அவர்கள் அப்படி விலகாதிருந்தால் அவர்களது தன்மையின் பயனாய் தாமாகவே விலக்கப்பட்டவர்களாக ஆகிவிடுவார்கள். ஆதலால் சிலர் விலகிவிட்டார்கள்என்பதை யாராவது அபிப்பிராய பேதம் என்று கருதுவதும், கட்சிக்குள் பிளவு என்று கருதுவதும் தெரியாமையேயாகும். விலகினவர்கள் தங்கள் தகுதிஇன்மையை சொல்லிக்கொள்ளக் கட்சி மீது, நம் மீது ஏதாவது குறையையோ தீர்மானங்களில் அதிருப்தியையோ காட்டுகிறார்கள் என்றால் அதை அலட்சியமாய் விட்டுவிடுவதுதான் ஒழுங்காகுமே ஒழிய அதற்குஆக நாம் விவாதம் புரிவதும் வகைதேடுவதும் அறிவுடைமையாகாது.

### நம் கொள்கைகள்

தோழர்களே! நம் சமுதாயத்திலும், சமயத்திலும், நாட்டு உரிமையிலும் நாம் இந்தியர், இந்துக்கள், பாரதியர், பாரதமக்கள் என்று சொல்லிக்கொள்வது தவறு என்றும், நாம் நம்மைத்திராவிடர், பகுத்தறிவு வாதிகள், திராவிட நாட்டவர் என்று சொல்லிக்கொள்ள வேண்டும் என்றும் திருவாரூர் மாநாட்டில் 1940-ம் வருடத்திலேயே தீர்மானித்துக் கொண்டிருக்கிறோம். ஏன் எனில் இந்த எண்ணம் நமக்குஇல்லாத காரணத்தினாலேயே நாம் நான் மேலே சொன்ன குறைகளுக்கும் இழிவுகளுக்கும் முற்போக்குத்தடைகளுக்கும் ஆளாக இன்றைய ஈன நிலையில் இருக்கிறோம் என்பதை விளக்கி வந்திருக்கிறேன்.

### ஏன் திராவிடர் என்கிறோம்?

44 கோடி இந்தியர்களுக்குள் நாமும் சேர்ந்தவர்கள் என்று சொல்லி நாம் இந்தியர் என்னும் உரிமை கொண்டாடினோமேயானால் பல துறையிலும் மற்ற மாகாண மக்களோடு வேறுபட்டுப் பின்னணியில் இருக்கும் 4 கோடி மக்களாகிய நாம் இந்தியரில் ஒரு மைனாரிட்டி சிறுபான்மைக் கூட்ட சமுதாயமாக அதுவும் 11—ல் 1—பங்கு சிறு கூட்டத்தினராக ஆகிவிடுகிறோம்; அது தவிர நாம் நம்மை இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளுவோமேயானால் இந்து சமயத்தின் (மதத்தின்) வருணாச்சிரமதர்ம முறைப்படி அதாவது பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர், அவர்ணன் என்கின்ற 5 பிரிவுகளில் நாம் 4-வது 5-வது பிரிவுக்கு ஆளாகி, மிகுதியும் தாழ்மையும் இழிவும் இருக்கிற ஈன மக்களாக ஆகிவிடுகிறோம்.

இவை சட்டப்படியும், சமயப்படியும், சாஸ்திரப்படியும், அமுலில் இருந்து வரும் நடவடிக்கை கிரமப்படியும், நம்மைச் செய்து விடுகின்றன என்பதோடு இதை நாமே மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொண்டவர்களாகவும் சகித்துக்கொண்டும் இருப்பவர்களாகவும் ஆக்கிவிடுகின்றன.

அதுபோலவேதான் நாம் நம்மைப் பாரதியர், பாரத புத்திரர் என்று சொல்லிக்கொள்ளுவோமானால் இந்தியாவின்

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

ராஜா முத்தையா

# திருச்சி மாநாடுகள்

## 50,000 மக்கள், 2-மைல் ஊர்வலம்

## ஆயிரக்கணக்கான பெண்களின் வெற்றி ஒலி

## 500 தொண்டர்கள், கொடிகளுடன் பலவாத்தியங்கள்

## சர்க்கார் தொல்லை

[நமது விசேஷ நிருபர்]

29-9-45 தேதியில் S. I. L. F. ஜஸ்டிஸ் கட்சி என்று பெயர் வழங்கிவந்து சென்ற வருஷம்] சேலம் 16வது S. I. L. F. மாநாட்டில் திராவிடர் கழகம் என்று (திரவிடன் பெடரேஷன் என்று ஆங்கிலத்தில்) பெயர் மாற்றப்பட்ட திராவிட கழக மாநாடு நடைபெற்ற காட்சியும் 30-ஆம் தேதியில் சுயமரியாதை 4-வது மாநாடு நடைபெற்ற நடவடிக்கையும் கொண்ட விபரம்:

மக்கள் ரயில் கஷ்டம் காரணமாக 27ந்தேதி காலைமுதற்கொண்டு பெண்டு பிள்ளை குழந்தை குட்டிகளுடன் ஆயிரக்கணக்காக வந்து குவிந்தவண்ணம் இருந்தனர்.

### பந்தல்

கொட்டகை 225க்கும் 225க்குமாக ஒன்றேகால் ஏக்கர் விஸ்தீரணத்திற்கு 400 பந்தல் கால்கள் நிறுத்தி சுற்றிலும் 20அடி காலி இடம் விட்டு சுற்று அடைப்பு செய்து மத்தியில் சுமார் 100X50 ஆக நன்றாய் வேய்ந்த கொட்டகை போட்டு 40X40 மேடை (பிளாட்பாரம்) நடுவில் வைத்து தலைவர் படங்களும், இயக்க லட்சியச் சொற்கள் நிறைந்த படங்களும், பெரியார் உருவம் கொண்ட கொடி சீலைகளும் பந்தலை அலங்கரிக்கவும், நூற்றுக்கணக்கான மின்சார விளக்குகளும், தாரசு போலவும், பெரியார் உருவம் போலவும், மின்சார விளக்குகளால் சித்தரித்தசின்னமும் இலங்கவும், வாயிலின் முன் 3X2 அளவில் மறைந்த பன்னீர் செல்வம் தலை சிரித்த முகத்துடன் விளங்கவும், அழகிய பிரபாவளி சித்திரங்களோடு வாயில்படியாகத் துலங்க வானளாவிய கொடி முன்னின்று மக்களை வாவா வென்று இருகரம் கொண்டழைப்பது போலப் பறக்கவும்ஆன பல காட்சியாகப் பன்னீர்செல்வம் பந்தல் விளங்கிற்று.

### ஊர்வலம்

மாநாட்டுக் கமிட்டியார் 29-ந் தேதி காலை 8மணிக்கெல்லாம் ஊர்வலம் ஏற்பாடு செய்திருந்தபடி மக்கள் பல பதினாயிரக் கணக்கில் தெப்பக்குளத்தண்டை வந்து கூடிஇருந்தனர். ஆனால் ஊர்வலம் ஏற்பாடு செய்திருந்த வீதி வழி செல்லக் கூடாது என்று பார்ப்பனப் போலீசு ஆதிக்கம் 27-ந் தேதி மாலை தடை உத்திரவு அனுப்பிவிட்டது. 15 நாட்களுக்கு முன்பே ஊர்வல வழியைச் சர்க்காருக்குத் தெரிவித்து இருந்தும் 3-ந் தேதி வரை ஊர்வலம் அந்த வழியில் கூடாது என்ற வாக்கில் தடை உத்திரவு 27-ந் தேதி இரவுதான் கிடைத்தது. மக்கள் அந்த உத்திரவை மீறி ஊர்வலம் நடத்தத் துடி துடித்தனர். பெரியாரின் பெரு முயற்சியாலும், பெருத்த தியாகத்துடனும், அதாவது இளைஞர்கள் பெரியாரை ஒரு பயங்காளி, கோழை என்று அழைப்பதையும் சகித்துக் கொண்டும் அந்த வழியில் ஊர்வலம் செல்லுவதை நிறுத்திக் கொள்ளப்பட்டது.

பிறகு அந்த வழி வியாபாரிகள், பெரிய மனிதர்கள் பலர் வந்து தோழர் வேதாசலம் அவர்களை அணுகி கடை வீதியில் சுமார் 500 ரூபாய்க்கு மேற்பட்ட செலவு செய்து சுமார் 20 டந்தர்களும் 30 வளைவுகளும் போடப்பட்டிருப்பதாயும், அந்த வழியில் செல்லவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டும், வேறொரு இளைஞர் கூட்டத்தார்கள் தோழர் அண்ணாதுரை அவர்களிடம் வந்து உயர்ந்த நாதஸ்வர வித்துவானாகிய- நாதசுர மணி குளிக்கரை தோழர் பிச்சப்பா அவர்களை ஊர்வலத்திற்கு வாசிக்க அழைத்துவந்திருப்பதாயும் எவ்வளவோ கேட்டும் பெரியார் ஒரே அடியாய்த் தடுத்துவிட்டதால் முதலாவது புலிவார்ட் ரோட்டு வழியாக ஊர்வலம் 29-ந் தேதி காலை 9½ மணிக்குத் துவக்கப்பட்டது.

பெரியார் ஈ. வெ. ராமசாமி, தோழர்கள் டி. சண்முகம், பழையகோட்டை இளைய பட்டக்காரர் என். அர்ஜுனன், கே. கே. நீலமேகம் ஆகியவர்கள் முதல் காரிலும், தோழர்கள் கனகம்மையார் இராமசாமி, ஈ. வெ. கிருஷ்ணசாமி, மிராண்டா, கஜேந்திரன், பாரதிதாசன், என். சங்கரன் ஆகியவர்களும், மற்றும் பல பெரியார்களுமாகப்பலகார்களில்பின் செல்லவும், பின்புறம் சுமார் 1000 பெண்கள் கூட்டம் ஊது குழாய் மூலம் வெற்றி ஒலியும், வாழ்த்தொலியும் ஒலிக்கவும், முன்னால் (10000) பத்தாயிரக் கணக்கான இளைஞர்கள் வாழ்த்தொலி, திராவிடநாடு வெற்றி ஒலி ஒலிக்கவும், பல ஜில்லாக்களில் இருந்துவந்த தொண்டர் படைகள், கால் நடையாய் மதுரை, தஞ்சைஜில்லாக்களில் இருந்து பற்பல மாதிரி உடைகளுடன் கொடிபிடித்து வரிசைவாரியாக முன் செல்ல, அவர்களுக்கும் முன்னால் பல செட்டு வாத்தியம் முழங்க 40000, 50000 மக்கள் முன்னும் பின்னுமாக செல்ல, இடையிடை ஊர்வலம் நிறுத்தி மாலைகள் இட, புட்பங்களைக் கூடை கூடையாய் வாரி வாரி வாழ்த்துரைகளுடன் அந்தந்த வீட்டு அணங்குகளும் குழவிகளும் வழி நெடுகத் தூவ, மாடிகளிலும், வராண்டாக்களிலும், வாசல்களிலும், மேடை, பால்கனிகளிலும் நெருக்கமாக நின்று வேடிக்கை பார்க்கும் மக்கள் பெரும்பாலோர் பெரியாரைப் பார்த்துத் தலைவணங்கிக் கை கூப்பி வணக்கம் காட்ட "நிதானம்", "மெள்ள" "மெள்ள" என்று கார்களுக்கு முன் மக்கள் நின்று தடுத்த வண்ணம் பின்புறமாய்ச் செல்ல மணிக்கு 1 மைல் வேகத்தில் 2 மைல் தூரம் நகர்ந்து 11 மணி சுமாருக்கு ஊர்வலம் கொட்டகையை அணுகிற்று.

இந்தக் காட்சியைத் திருச்சி இதுவரை கண்டதில்லை என்று 75, 80 வருஷ முதியோர்கள்வரை சொல்ல 4 பர்லாங்கு தூரம் மக்கள் உள்ள ஊர்வலம் சென்றது குறிப்பிடத்தக்கதாகும்.

### நடவடிக்கை

ஊர்வலம் கொட்டகை சென்றது.

ஏற்கனவே மக்கள் பந்தலில் கூடிவிட்டதால் ஊர்வலத்தில் வந்த மக்கள் மிக்கக் கஷ்டத்தோடு கொட்டகையில் அமர்ந்தனர்.

கொட்டகையில் பெண்கள் மாத்திரம் 1000 பேர்களுக்கு மேலாகக் கூடியிருந்தனர். ஜில்லா வாரியாகப் பிரதிநிதிகள் வந்திருந்ததில் நாகர்கோயில், கொளும்பு, மலையாளம், ஆந்திரா, கர்னாடகா, பம்பாய், கான்பூர், கராச்சி முதலிய இடங்களில் இருந்து சிறிய எண்ணிக்கை பிரதிநிதிகளும், சேலத்தில் இருந்து 2000 மும், தஞ்சையில் இருந்து 2000 மும் மற்றபடி பல ஜில்லாக்களில் இருந்தும் 1000, 1000 பேர்களுக்குக் குறையாமலும் வந்து குவிந்திருந்தார்கள். பொன்மலைத் தொழிலாளர்கள் புயல்காற்றில் பட்ட அலைபோல் கொட்டகை முழுவதும் பல உருவங்களில் பல காரியக்காரர்களாக அலைந்தும், திரிந்தும், தொண்டாற்றியவண்ணம் காணப்பட்டார்கள். "செண்ட்ஜான் ஆம்புலன்ஸ் கோர்" ஆஸ்பத்திரியும், தனிப்பட்ட முதல் சிகிச்சை ஸ்தலங்களும், காப்பி, டீ, வெற்றிலைபாக்கு, பிரியாணி சிற்றுண்டி, சோடா, சர்பத்பானம், புத்தகங்கள், ஜவுளிக்கடைகள், இயக்கத் தலைவர்கள் படக்கடைகள், பேட்ஜ் கடைகள், இயக்க குறிச்சொல் பொறித்த துணிக் கடைகள், மற்றும் தேர் திருவிழாக் கடைகளும் நூற்றுக்கணக்காய் மிளிர்ந்தன.

தனிப்பட்ட சாப்பாட்டுக் கடைகள் போக மாநாட்டுக் கமிட்டியாரால் ஏற்பாடு செய்யப்பட்டுச் சாப்பாட்டிற்கு, மக்கள் இருந்து உண்ண 200X35 ஆக பெரிய பந்தலும் சமைக்க 25க்கு 75ஆக ஒரு பெரியகொட்டகையும் போடப்பட்டு 30 மூட்டை அரிசி ரேஷன் ஆபீசர் இடம் பெற்றதோடு மற்றும் ஏராளமான சகல சாமான்களும் அடியோடு செலவாகி சிறிதும் மிச்சம்இல்லாமல் போகும் படியான தன்மையில் சமையல் நடந்தது என்னலாம்.

இந்த நிலையில் மாநாடு துவக்கப்பட்டதும் தோழர் டி.வி நாராயணசாமி அவர்கள் திராவிட நாட்டுப்பண் பாட்டுப் பாடி முடிந்ததும், தோழர் பிச்சையப்பா நாக்சுரக்கச்சேரி துவக்கப்பட்டது. இதை பிற்பகல் நடவடிக்கையில் வைத்துக் கொள்ளலாம் என்று பெரியார் கேட்டுக் கொள்ள, தோழர் மிராண்டா கஜேந்திரன் அம்மையார் பி.ஏ., திராவிட கழகக் கொடியை உயர்த்தினார்கள். (சொற்பொழிவு பின்னால் வரும்)

பிறகு பழயகோட்டை இளவல், இளைய பட்டக்காரர் தோழர் என்.அர்ச்சுனன் அவர்கள் மாநாட்டைத் துவக்கி வைத்தார்கள். (சொற்பொழிவு பின்னால் வரும்)

பிறகு தோழர் வேதாசலம் B. A. அவர்கள் மாநாட்டுக்கு வந்த மக்களை வரவேற்று சொற்பொழிவாற்றி பெரியாரைத் தலைமை வகிக்க வேண்டினார்கள். (சொ. பி. வ.)

பிறகு தலைவர் பெரியார், மிகுந்த பீரங்கிக் குண்டுகள் தொடர்ந்து வெடிக்கும் சத்தம் போல் மக்கள் வாழ்த்தொலிகளும், கைதட்டல்களும், உற்சாகக் கூப்பாடுகளும் ஒலிக்க, எழுந்து நின்று தலைமையுரை 1½ மணி நேரம் நிகழ்த்தினார். இந்தச் சமயத்தில் சுமார் 100 மாலைகள், பல கட்சி, பல வகுப்புகள் பேரால் சூட்டப்பட்டன. இது முடிந்ததும் காலை நிகழ்ச்சி முற்றுப்பெற்றது.

### பிற்பகல் நிகழ்ச்சி

உணவுக்குப் பின் 3 மணிக்கு மாநாடு துவக்கப்பட்டுப் பிற்பகல் நடவடிக்கைகள் நடந்தன.

இன்னிசைப் பெருங்கோ குளிக்கரை தோழர் பிச்சப்பா நாதஸ்வரக் கச்சேரி ½ மணி நேரம் நடந்தது. பெரியார் தோழர் பிச்சப்பாவை வாழ்த்தித் தங்கப் பதக்கம் அணிவித்தார். பின் மாநாடு துவக்கப்பட்டதும் முன் தெரிவித்திருந்தபடி திருத்தங்கள் செய்யப்பட்ட விதிமுறைகள் தோழர் அண்ணாத்துரை அவர்களால் வாசித்து விளக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு நிர்வாகக் கமிட்டித் தேர்தல் முறை சொல்லப்பட்டு அதன்படி ஜில்லா கமிட்டி மக்கள் கூடி தெரிந்தெடுத்துத் தெரிவிக்கும்படிக் கேட்டுக்கொள்ளப்பட்டது. அந்தப்படி கொடுக்கப்பட்டன. பிறகு 25 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இவை முடிந்தவுடன் விதி முறைப்படி கட்சிக்கு நிரந்தரத் தலைவர் [லீடர்] தேர்தல் செய்ய பிரேரபணை வந்தது. இந்தச் சமயம் பெரியார் தனது தலைமை ஸ்தானத்தைக் காலி செய்து தோழர் டி. சண்முகம் அவர்களைத் தலைமைவகிக்க அனுமதிபெற்று உட்காரச் செய்துவிட்டு டவுனுக்குள் சென்றுவிட்டார். பின் விதிமுறை விளக்கி தோழர் அண்ணாதுரை அவர்கள் கட்சிக்கு நிரந்தரத் தலைவராக இருக்க பெரியார் பெயரை பிரரேபித்தார், தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் ஆமோதித்தார். பெயர் பிரேரேபித்தது முதல் முடிவுவரை மக்களின் ஆரவாரமும், கைதட்டு ஒலியும் தொடர்ந்து இருந்ததென்றே சொல்லலாம்.

அது நிறைவேறியவுடன் தீர்மானங்கள் ஒன்றன்பின்ஒன்றாய் நிறைவேற்றப்பட்டு வந்தன.

### சுயமரியாதை இயக்க மாநாடு

அடுத்தநாள் காலை 9மணிக்கு சுயமரியாதை இயக்க மாநாடு துவக்கப்பட்டது; பலர் பாடினார்கள்.

தோழர் கனகம்மையார் இராமசாமி ஒரு ரசமான சொற்பொழிவும், கொடி பற்றிய ஒரு பாட்டும் சொல்லி சுயமரியாதைக்கொடியை உயர்த்தினார். தோழர் கே. கே. நீலமேகம் மாநாட்டுத் துவக்க விழாவாற்றினார்.

தோழர் அண்ணாதுரை வரவேற்பு உரை நிகழ்த்தி, தோழர் டி. சண்முகம் அவர்களைத் தலைமைவகிக்கக் கேட்டுக் கொண்டார். பெரியார் ஈ. வெ. ரா. அதை ஆமோதித்துத் தலைவருக்கு மாலை சூட்டினார்.

தோழர் திருவொற்றியூர் டி.சண்முகம் அவர்கள் தலைமை வகித்து, தலைமை சொற்பொழிவு நிகழ்த்தினார். [இவ்வு அடுத்த வாரம் வரும்]

மாநாடு உணவுக்கு ஒத்திவைக்கப்பட்டது. தலைவர்களுக்குத் தோழர் எம். ஏ. அருணாசலம் செட்டியார் மாளிகையில் விருந்து நடந்தது.

### பிற்பகல்

பிற்பகல் மாநாடு துவங்கியதும் இயக்க விதி முறைகள் பெரியார் அவர்களால் வாசித்து நிறைவேற்றப்பட்டன.

பிறகு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முதல் நாள் மாநாட்டைவிட 2-வது நாள் கூட்டம் அரைப்பங்கு அதிகம் என்றே சொல்லலாம். அன்று ஞாயிற்றுக்கிழமை ஆனதால் பிற்பகல் சுமார் 5 மணிக்குப் புத்தூர் மைதானம் 4, 5 ஏக்கர் விஸ்தீரணம் முழுவதும் நிலம் காணமுடியாதபடி, அடிமேல் அடி வைத்து நடப்பதானாலும் அடிக்கு 5 நிமிஷம் பிடிக்கும்படியான கூட்டமும் நெருக்கமும் ஏற்பட்டுவிட்டன.

மூன்று, நான்கு 'மைக்'குகளும்10, 15 ஒலிபெருக்கும் குழாய்களும் வைத்திருந்தபடியால் எவ்வளவு நெருக்கம், நெருக்கடி, சத்தம் ஏற்பட்டாலும் சிறிதும் குழப்பத்திற்கோ, குந்தகத்திற்கோ இடமில்லாமல் மாநாட்டு நடவடிக்கைகள், பேச்சுக்களை மக்கள் கேட்டு இன்புற்றவண்ணம் இருந்தனர்.

## இரவு இராதா நாடகம்

### போர்வாள்
### 1,00,000 மக்கள்

ஒரு லட்சம் மக்கள், 5000 பெண்கள், உள்ளூர் அதிகாரிகள், கோஷாப் பெண்கள், பெரிய மனிதர்கள் முதலிய பல இன மக்களும் ஏராளமாய் வந்து தாராளமாய்இருந்து 11 மணி முதல் 2-30 மணி வரை இந்த நாடகத்தைப் பார்த்து இன்புற்றது குறிப்பிடத்தக்கதாகும். "இப்படிப்பட்ட நாடகங்கள் நடந்தால் மாநாடு வேண்டாம், மீட்டிங்கு வேண்டாம், கட்சியும் வேண்டாம், அண்ணாத்துரை, அழகிரியும் வேண்டாம்; பெரியாரும் வேண்டாம்" என்று பெருவாரி மக்கள் பேசிக் கொண்டே போனார்கள்.

(தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)

# திருச்சியில் தீர்மானித்தவை!

பிற்பகல் நடவடிக்கைகள்—

நாதசுர வித்வான் தோழர் குளிக்கரை பிச்சப்பா அவர்கட்குப் பெரியார் அவர்கள் "நாதசுர வித்வான் வாழ்க" என்று சொல்லி, ஒரு தங்கப் பதக்கத்தைப் பரிசளித்தார்கள்.

வாழ்த்துச் செய்திகள்

காக்சார் தலைவர் அல்லாமா மஷ்ரிகி, லாகூர் ஹிந்து மிஷனரி சொஸைட்டியைச் சேர்ந்த தோழர் ஹர்பகவான், அகில இந்திய பிற்படுத்தப்பட்டார் பெடரேஷனைச் சேர்ந்த லட்சுமணபுரி தோழர்கள் கவுரிசங்கர்பால், சச்சிதாநந்த சுவாமி, கோவை திவான்பகதூர் சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார், மாஜி மந்திரி எஸ். முத்தய்ய முதலியார், கரந்தைப் புலவர் கோ. சி. பெரியசாமி, சென்னை பச்சையப்பன் கல்லூரி எம். வரதராஜன், பம்பாய் தாராவி கந்தசாமி, பெரியசாமி ஆகியவர்களும், மற்றும் சுமார் 100-க்கு மேற்பட்ட பெரியோர்களும், தோழர்களும் அனுப்பிய வாழ்த்துச் செய்திகளும், தந்திகளும் தோழர் கஜேந்திரனால் வாசிக்கப்பட்டன.

பின்னர் 25 தீர்மானங்கள் பிரரேபிக்கப்பப்பட்டு, ஆமோதிக்கப்பட்டு, நிறைவேற்றப்பெற்றன.

தீர்மானங்கள்

**1.** போர்வெற்றி:

பாசீச-ஜப்பானிய கூட்டுறவால் இந்திய உபகண்டத்திற்கு ஏற்படவிருந்த ஆபத்து நீங்கிவிட்டதற்காகவும், ஜனநாயக விரோதிகள் அழிந்து விட்டதற்காகவும், இம்மாநாடு தனது சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

—தலைவர்

**2.** அநுதாபம்:

தோழர்கள் C. D. நாயகம், பழயகோட்டை பட்டக்காரர், இரட்டைமலை சீனிவாசன், திருவாரூர் ஆறுமுக நாடார், திருச்சி அங்கமுத்து அம்பலகாரர் ஆகியோர் மறைந்துவிட்டதற்கு மாநாடு தன்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளுவதோடு, அவரவர்களுடைய குடும்பத்தாருக்குத் தன்னுடைய ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

—தலைவர்

**3.** திராவிடர் கழகத்தின் விதிமுறைகள்:

கழகத்தின் பெயர்: திராவிடர் கழகம்.

லட்சியம்:

1. (a) திராவிடநாடு (சென்னை மாகாணம்) சமுதாயம், பொருளாதாரம், தொழில் துறை, ஆகியவற்றில் பூர்ண சுதந்திரமும், ஆதிக்கமும் பெற வேண்டும்.

(b) திராவிடநாடும், திராவிட நாட்டு மக்களும், திராவிட நாட்டவரல்லாத அந்நியர்களின் எந்தவிதமான சுரண்டல்களிலிருந்தும், ஆதிக்கத்திலிருந்தும் காப்பாற்றப்படவேண்டும்.

2. திராவிட நாட்டிலுள்ள மக்கள் யாவரும் ஜாதி, வகுப்பு, அவை சம்பந்தமான உயர்வு தாழ்வு இல்லாமல் சமுதாயத்திலும், சட்டத்திலும் சம உரிமையும், சமசந்தர்ப்பமும் பெற்று, சமவாழ்வு வாழச்செய்ய வேண்டும்.

3. (a) திராவிடநாட்டு மக்களுக்கு, சமயம், சமயாதாரம், பழக்க வழக்கம் என்பவைகளின் பேரால் இருந்து வரும் பேத உணர்ச்சி, மூடநம்பிக்கை ஆகியவைகள் மறையச்செய்து அவர்களைத் தாராள நோக்கமும், நல்ல அறிவு வளர்ச்சியும் பெற்ற ஒன்றுபட்ட மக்களாகச் செய்யவேண்டும்.

(b) இவைகள் வெற்றி பெறுகிறவரை, ஜாதி சமய வகுப்பு பேதம் ஆகியவை உள்ள மக்களுக்கு நம்மிடம் (கழகத்தாரிடம்) முழு நம்பிக்கையும், நல்லெண்ணமும் ஏற்பட்டு மேற்கண்ட முயற்சிகளுக்கு நம்மோடு களங்கமற்று ஒத்துழைக்கவேண்டிய அவசியத்திற்காக, அவர்களுக்கு எண்ணிக்கை, அவசியம் ஆகியவைகளுக்குத் தக்கபடி முக்கியமான துறைகளிலெல்லாம் பிரதிநிதித்துவம் கிடைக்கும்படி செய்யவேண்டும்,

இவைகளுக்கு வேண்டியதும், மற்றும் இவைபோன்ற லட்சியங்களுக்கு வேண்டியதுமான காரியங்களை நிறைவேற்ற வேண்டியதற்கு அவசியமான திட்டங்களை வகுத்துக் கொள்ள வேண்டும்.

ஸ்தாபனம்:

1. (a) திராவிடர் கழக ஸ்தாபனமானது தற்காலம் சென்னை மாகாணம் முழுவதுமான திராவிடநாட்டில் ஜில்லாக்கள், தாலூக்காக்கள், முக்கியமான ஊர்கள் ஆகிய எல்லா இடங்களிலும் இருக்கத்தக்கதாகும்.

(b) மேற்படி இடங்களில் உள்ள திராவிடர் கழக லட்சியங்களைக் கொண்ட வேறு பெயருள்ள ஸ்தாபனங்களும் இதனுடன் சம்பந்தப்படுத்திக் கொள்ள அநுமதிக்கப்படலாம்.

அங்கத்தினர்:

மேற்கண்ட கழக லட்சியங்களை ஒப்புக்கொண்டு, அவை நிறைவேறுவதற்காக, திராவிட நாடு இந்திய (மத்திய) அரசாங்க ஆதிக்கத்திலிருந்து விலகி தனி சுதந்திர திராவிட நாடாக ஆக வேண்டியது மிகவும் முக்கியமானது என்கின்ற திராவிட நாட்டுப் பிரிவினைத் தத்துவத்தையும் ஏற்று கழக விதி முறைகளுக்கு இணங்கி,

(தொடர்ச்சி 10ம் பக்கம்)


# மே. த. கவர்னரின்

## யுத்த நிதி

பிரிட்டிஷ் ஜனநாயக நாடுகள்

(காமன் வெல்த்)

வெற்றியடைய உதவியதற்காக

பெருமையடைகிறது.

★

ஆனால்

துருப்புகளின் சௌகரியங்களுக்கு

இன்னும் பொருளுதவி மிகமிகத் தேவையாகிறது.

குடி அரசு

1945-ஆ செப்டம்பர் மீ 29உ

# திருச்சி மாநாடுகள் நடந்தன

செப்டம்பர் மாதம் 29, 30 தேதிகளில் திருச்சி மாநாடுகள், அதாவது திராவிடர்கழக மாநாடும், சுயமரியாதை மாநாடும் மிகமிக சிறப்புடன் வெற்றிகரமாக நடந்தன. திராவிட கழக மாநாட்டில் சேலம் தீர்மானத்தை அதற்கு சேலத்தில் விதிக்கப்பட்ட நிபந்தனைகள் யாவும் நிறைவேற்றப்பட்டிருப்பதை பாராட்டுதலுடன் ஏற்றுக் கொண்டு அத்தீர்மானம் உடனே அமுலுக்கு வரத்தக்கதென்று ஏகமானதாக உற்சாகத்தோடு தீர்மானிக்கப்பட்டுவிட்டது.

தீர்மானம் நிறைவேறிய உடன் ஒரு தோழர் தனது நியமனப் பதவியை, (ஆனரரி மேஜிஸ்டிரேட் பதவியை) ராஜினாமாச் செய்வதாகத் தெரிவிக்கும்படி பெரியாருக்குச் சீட்டு அனுப்பினார். பெரியார் "வீட்டுக்குச் சென்று நிதானமாய் யோசித்து முடிவு செய்து தெரிவியுங்கள்" என்று எழுதித் திருப்பி அனுப்பிவிட்டார். இந்த நிலையில் தீர்மானம் நடந்தேறியது. இனி என்னநடக்கப் போகிறது என்பது கவனிக்கப்படத் தக்கதேயாகும்.

நிற்க, திருச்சி மாநாடுகள் மிக்க விமரிசையாகக் கூடின என்பதோடு ஜஸ்டிஸ் கட்சியும், சுயமரியாதைக் கட்சியும் தமது மாநாடுகளில் 40 ஆயிரம், 50 ஆயிரம் மக்கள் ஆண், பெண்களுடன் கூடிகாரியங்கள் நடத்துகின்றன என்றால், அதிலும் மாநாடுகள் கூடும்போதெல்லாம் வருஷத்திற்கு வருஷம் பிரதிநிதிகள் அதிகமாக வரவும் மக்கள் உணர்ச்சித் தன்மையும் அதிகமாகிக்கொண்டே வருகிறதென்றால், தீர்மானங்களும் நாளுக்கு நாள் தீவிரமாக ஆகிக்கொண்டு வருகின்றன என்றால், இயக்கம் நாளுக்கு நாள் மேம்பட்டு செல்வாக்கும்பெற்று மக்கள் ஆதரவு பெற்றுவருகிறது என்று அருத்தமா? அல்லது நம்மை விட்டு விலகவேண்டியதாய் ஏற்பட்ட ஒருசிலர் சொல்லித் திரிகிறபடி இயக்கம் குன்றிப்போய்விட்டது, கெட்டுப்போய் விட்டது என்று அருத்தமா? என்று யோசித்துப் பார்க்கவேண்டுகிறோம்.

இயக்கத்தில் இருந்த பழம் பெருச்சாளிகள் சிலர் விலகி இருக்கலாம். ஆனால் புது உணர்ச்சியும், வரவும் ஒன்றுக்கு 100ஆக இருக்கிறது என்பதைத் திருச்சி மாநாட்டுக்கு வந்த எவர்தான் மறுக்கமுடியும்? ராஜாக்களும், சர்களும், திவான்-ராவ்பகதூர்களும், சாஹெப்களும், நியமன பதவி ஆளர்களும், சட்டசபைக்கு செல்லத் துடிக்கும் சில பெரியோர்களும் கட்சியில் இல்லை என்று சொல்லப்படலாமானாலும் கட்சிக்கொள்கைக்குஆக வாழ்வை, தொண்டை, ஏன் தங்கள் கடைசி மூச்சையும்கூட ஒப்படைத்த, ஒப்படைக்க துணிவுகொண்ட மக்களும், இளைஞர்களும், பெண்மணிகளும் இயக்கத்தில் இல்லை என்றோ, அது நாளுக்குநாள் பெருகவில்லை என்றோ யார் சொல்லமுடியும்?

இயக்கத்தின் தன்மைக்கு திருச்சி மாநாட்டில் சர்க்கார் தொல்லை, போலீசார் விஷமம் இருந்தும், எதிரிகள் கூலிகளை விட்டுக் கீழ்த்தர விஷமத்தனமான பிரசாரம் செய்தும், பார்ப்பனர் சூழ்ச்சி கொழுந்துவிட்டு எரிந்தும் மாநாடுகள் வெற்றியோடு நடக்கவும், சர்கள், பகதூர்கள், சாஹெப்புகள், லட்சாதிபதிகள், கோடீஸ்வரர்கள் கூடிக்கொண்டு காலிகளையும், போலீஸ் பந்தோபஸ்தையும் பூரண ஆதரவாகக் கொண்டு குறிப்பிட்ட, பூட்டப்பட்ட இடத்தில் குறிப்பிட்ட இரண்டொருவர் சொந்தப் பணத்தில் விளம்பரத்தில் மாநாடுகள் முக்கிய பட்டணங்களில் எதிரிகளுடைய (பார்ப்பனரின்) ஆதரவையும் கொண்டு நடத்தியும் சர் ஷண்முகம், சர் பி. டி. ராஜன், சர் பாத்ரோ, சர் கோபதி, மற்றும் இளவரசுகளும், செல்லப் பிள்ளைகளும் என்று சொல்லும்படியானவர்கள் மேடையையும் தலைமை ஸ்தானத்தையும் அலங்கரித்தும் இதில் (திராவிட கழகத்தில்) தள்ளுபட்டவர்களெல்லாம் அங்கு கவுரவபிரதிநிதிகளாக கவுரவ பிரமுகர்களாக வந்து மாநாட்டுப் பிரதிநிதிகள் இருக்கும் ஆசனங்களை அலங்கரித்தும் டீபார்ட்டியோடு ஆரம்பித்து டின்னர்களோடு முடித்தும் "மாகாண மாநாடு" துவக்கத்தில் 313 பேர், சாத்துமுறையின்போது (முடிவில்) 53 பேரும் இருந்தார்கள் என்றால் அதையும் இதையும் பொதுமக்களாவது யோக்கியமான சர்க்காராவது சீர்தூக்கிப் பார்ப் பார்களானால் என்ன சொல்லக்கூடும்? எப்படிக் கருதுவார்கள்? என்பதை வாசகர்களே முடிவு செய்துகொள்ள விட்டுவிடுகிறோம்.

விலகினவர்கள் தாங்கள் ஒரு தனிக் கட்சியார் என்று சொல்லிக்கொண்டு அவர்களது தகுதிக்கு, ஆசைக்கு ஏற்ற காரியங்களைச் செய்ய முன் வந்திருப்பார்களேயானால் இன்று அவர்கள் சிறிதாவது மதிக்கப்படத் தக்கவர்களாக ஆகி இருக்கலாம். அதை விட்டுவிட்டு "இங்குள்ள நாங்கள்தான் ஜஸ்டிஸ்கட்சியாளர்கள். வெளியில் உள்ள மற்றவர்கள், தள்ளப்பட்டவர்கள்" என்று அற்பர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு பேராசையால் மதி இழந்து கூப்பாடு போட்டதால் இப்போது பொது மக்களால், நாணய உலகில் இருந்து யார் தள்ளப்பட்டு விட்டார்கள் என்பதை இவர்களுக்கு இரகசியத்தில் ஆதரவு கொடுத்துத் தூண்டிவிட்ட சர்க்கார், அதிகாரிகள்கூட அறிந்திருப்பார்கள்.

உண்மையில் மாஜி திவான்களும், மாஜி மந்திரிகளும், மற்றும் சில மாஜிகளும், சேர்ந்துகொண்டு தங்களுக்கு மூக்குப் போனாலும் சரி, எதிரிக்கு சகுனத்தடை ஏற்பட்டால் போதும் என்று கருதி பொதுமக்கள் ஆதரவு உலகில் மூக்கை அறுத்துக்கொண்டார்கள். இவர்கள் யாரை எதிரியாகக் கருதி சகுனத்தடை உண்டாக்க முயற்சிக்கிறார்களோ அவர்கள் (அந்த எதிரிகள்) சகுனத்தில் நம்பிக்கை இல்லாதவர்களும் "சகுனத்தை" லட்சியம் செய்யாதவர்களும் ஆவார்கள் என்பதை அறியாமல் மோசம் போய் விட்டார்கள். ஆகவே இவர்கள் செயலால் திராவிட மக்களுக்கு ஒன்றும் கெடுதி ஏற்பட்டுவிடவில்லை.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

அடுத்தபடி சர்க்கார் தொல்லை: அதாவது சர்க்கார் திருச்சி சிப்பந்திகள் திருச்சி மாநாட்டுக்குத் தொல்லை கொடுப்பதில் பின்வாங்கவில்லை. போலீசார் ஊர்வலத்தை 3ந்தேதி வரை கடைவீதியில் செல்லக்கூடாது என்று தடுத்துவிட்டார்கள். போலீஸ் டிப்டி சூபரின்டெண்டெண்ட் ஒரு அய்யங்கார் தனது பொறுப்புள்ள துணைஅதிகாரிகள் கருத்துக்கு விரோதமாக பிடிவாதமாகச் செய்துவிட்டு தனது தந்திரத்தால் ஊர்நிலவரமறியாத கலெக்டரையும் அதை ஆதரிக்கச் செய்துவிட்டார்.

மற்றும் இஞ்சினீரிங் டிபார்ட்மெண்டார் அதைவிடத்தொல்லை கொடுத்தார்கள். போட்டு முடிவான பந்தலைப் பிரிக்கும்படி காரியதரிசிக்கு உத்திரவு அனுப்பி, தாசில்தாரை விட்டுப் பிரிக்கும்படி உத்திரவுபோட்டு, பிரிக்க போலீசாரை உதவிசெய்யுமாறு தெரிவித்து விட்டார்கள். ஆனால் அப்பந்தல்கள் கலெக்டர் உத்திரவின்மீது 15-நாட்களுக்குமுன் ஆரம்பித்து ஒரு வாரத்திற்குமுன்பே போடப்பட்டதாகும். அப்படி இருக்க 27ந்தேதி இரவுதான் அப்பந்தல் பிரிக்கும் உத்திரவு கிடைத்தது. அதைத் தூக்கிக்கொண்டு கலெக்டர் வீட்டிற்குப்போனால் அவர் ஊரிலில்லை. இஞ்சினீயர் வீட்டுக்குப்போய் கலெக்டர் உத்திரவைக் காட்டினால் "உத்திரவுகொடுத்தவர் ஜில்லா மேஜிஸ்ட்ரேட்டே ஒழிய, கலெக்டர் அல்ல. அதுவும் அந்த உத்திரவில் ஜில்லா மேஜிஸ்டிரேட், கான்பரன்ஸ் நடத்த உத்திரவு கொடுத்திருக்கிறாரேஒழிய பந்தல் போட்டுக்கொள்ள உத்திரவு கொடுக்கவில்லை" என்று சொல்லிவிட்டார். அதைத் தூக்கிக்கொண்டு தாசில்தார் இடம் போனதற்கு அவர் "எனக்குத் தெரியாது, உடனே பந்தலைப் பிரித்துவிட்டு மறு வேலை பார்" என்று சொல்லிவிட்டார். பிறகு கலெக்டர் இல்லாததால் கலெக்டர் பர்சனல் அசிஸ்டெண்ட் இடம்போய் தொங்கிய பிறகு அவர் திராவிடரானதால் சிரித்துக்கொண்டே "நடத்துங்கள்" என்று சொல்லிவிட்டு, தாசீல்தாருக்கு பிரிக்கவேண்டாம் என்றும் சொல்லிவிட்டுப் பார்ப்பன எக்சிக்யூட்டிவ் இஞ்சினீருக்கும், பார்ப்பன சப்டிவிஷன் ஆபீசருக்கும் தாம் அனுமதி அளித்துவிட்டதாகத் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது. இந்தத் தொல்லைகள் 28-ந் தேதி படவேண்டி இருந்தது என்பதோடு மக்களுக்கு ஏற்பட்ட ஆத்திரத்தையும், சட்டம் மீறும் உணர்ச்சியையும் அடக்கிய தலைவர்கள் கோழைகள், துடை நடுங்கிகள் என்று பேர் வாங்க வேண்டியதாயிற்று.

இதிலிருந்தாவது இன்றுஇந்நாட்டில் ஆரியஆட்சியை வெள்ளையர் நடத்திக் கொடுக்கிறார்கள் என்பது மக்களுக்கு வெளியாகவில்லையா? என்று கேட்கிறோம்.

முடிந்த பந்தலைப் பிரிக்கும்படி சிப்பந்திகளுக்குத் தாக்கீது கொடுப்பது என்றால், அதுவும் மாநாடு 29-ந் தேதி நடக்க இருக்கும்போது 27-ந் தேதி இரவு 7 மணிக்கு உத்திரவு சார்வு செய்யப்படுகிறது என்றால், 10 நாளாகப் பார்த்துக்கொண்டு இருந்த பின்பு சார்வு செய்கின்றதென்றால், எவ்வளவு ஆத்திரப்படத்தக்க விஷயம் என்பது கவனிக்கப்படத்தக்கதாகும். அதுபோலவே 10 நாட்களுக்கு முன்னால்தெரிவித்த ஊர்வலத்தை டிப்டி சூபரின்டெண்டெண்ட் நிறுத்திவிட்டார் என்று கலெக்டரிடம் சொன்னால் "ஊர்வலத்தில் யானை வந்தால் அது மக்களைக் கொன்று விடும், கூட்டம் அதிகம் ஆகிவிடும் என்றும் பந்தோபஸ்துக்குப் போதிய போலீசு கைவசமில்லை என்றும் டிப்டி சூபரின்டெண்டெண்ட் சொல்லுகிறார். ஆதலால் யோசித்து உத்திரவு போடுகிறேன்" என்று கலெக்டர் சொல்லிவிட்டு, (கலகம் ஏற்படலாம் என்றும் கருதிய) கலெக்டர் ஊரைவிட்டுப் போய்விட்டார் என்றால் பிரிட்டிஷ் ஆட்சி பிரெஞ்சு ஆட்சியைத் தோற்கடித்து விட்டதெனலாம்.

இதைப்பற்றி அதிகாரிகளுக்கு அவசரத் தந்திகள் கொடுக்கப்பட்டன. ஆனால் அனுகூலம் ஒன்றும் ஏற்படவில்லை. மாநாட்டில் இதுபற்றி கண்டனத் தீர்மானம் செய்து அனுப்பப்பட்டிருக்கிறது என்றாலும் அதுவும் குப்பைத் தொட்டிக்குப் போகலாம் என்பதில் சந்தேகமில்லை. நம் நாட்டு ஆட்சி முறைக்கு இதை எடுத்துக் காட்டாகக் காட்டுகிறோம்.

மாநாட்டில் முக்கிய காரியங்களாக சேலம் தீர்மானம் அமுலுக்

# கருப்புச் சட்டைப் படை அமைப்பு

திருச்சியில் 17வது மாகாண திராவிடர் கழக (ஜஸ்டிஸ் கட்சி) மாநாடு தீர்மானித்தபடி இயக்கத் தொண்டுக்கு கருப்புச் சட்டைப் படை திரட்டும் வேலை துவக்கப்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய முழு நேரத்தொண்டர்களே பெரிதும் சேர்க்கப்படுவார்கள் ஆதலால் அதில் சேர சம்மதமுள்ள படைவீரர்கள் தங்கள்

ஊர்
பெயர்
தகப்பன் பெயர்
படிப்பு அளவு
வயது
தமது தகுதித்தன்மை

ஆகியவைகளை அடியில்கண்ட விலாசத்துக்கு முதலில் தெரிவிக்க வேண்டுமாய் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

E. V. K. சம்பத்,
S. கருணானந்தம்,
க. ச. படை தற்காலிக அமைப்பாளர்கள்.

ரோஜா முத்தையா

குக் கொண்டு வரப்பட்டுவிட்டதோடு விதி முறைகள் திருத்தமும் செய்திருப்பதோடு கருப்புச் சட்டைத்தொண்டர்படை சேர்க்க வேண்டுமாய்த் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அது இப்போது அவசரமாயும் நடைபெறலாம். மற்றும் ஆந்திரா, கர்னாடகா, கேரளா முதலிய பிரதேசங்களுக்குச் சென்று அங்கும் தமிழ் நாடு போன்று திராவிட கழகத்திற்கு அங்கத்தினர்கள் சேர்க்கவும், கிளை ஸ்தாபனங்கள் அமைக்கவும், வேலை செய்யவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இவைகள் நடைபெற ஏற்பாடுகள் செய்த பிறகே தீவிரக் கிளர்ச்சி வேலை துவக்கவும் நமது கொள்கைகளை வெளி மாகாணங்களிலும் பரவச் செய்யவும் வேண்டும்.

இவை தவிர நமக்கு மற்றொரு சங்கடமும் ஏற்படலாம் என்று எதிர்பார்த்திருக்க வேண்டும். என்னவெனில் சேலம் மாநாட்டுத் தீர்மானம் திருச்சி மாநாட்டில் அமுலுக்கு வந்துவிட்டதின் பயனாய் இயக்க அங்கத்தினர்களுக்குள் பல மாறுதல்கள் ஏற்பட்டாலும் ஏற்படலாம்.

தேர்தலை பஹிஷ்கரித்து அதனுடன் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதானது ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் இன்று இயக்கத்தில் இருக்கும் சில தோழர்களுக்கு திருப்தி அளிக்கவில்லை என்று நன்றாய்த் தெரிகிறபடியால் சில தோழர்கள் இயக்கத்தில் இருந்து விலகினாலும் விலகலாம். ஆகவேதான் மாறுதல்கள் ஏற்படலாம் என்கிறோம்.

மாநாட்டில் விறுவிறுப்பான தீர்மானம் இல்லை என்று மக்கள் குறைசாட்டிக்கொண்டு சென்றார்கள் என்றாலும் விறுவிறுப்பு இருக்கிறது என்பதை சமீபத்தில் உணரலாம்.

என்வே அடுத்தவாரம் இத்தீர்மானங்களைப் பற்றிய விளக்கத்தையும், மற்றும் பல விஷயங்களைப் பற்றியும் விவரிக்கலாம் என்று கருதுகிறோம்.

---

(7ம் பக்கத் தொடர்ச்சி)

கையொப்பமிட்ட 18 வயது கடந்த ஆண் பெண் எவரும் திராவிடர் கழகத்தில் அங்கத்தினராக உரிமையுண்டு.

**கட்சித் தலைவர்:**

திராவிடர் கழகத்திற்கு ஒரு கட்சித் தலைவர், கட்சியை நடத்தும் பொறுப்பளிக்கப்பட்டவராகவும் அவசியத்தைப் பொறுத்து மாறுதல் ஏற்படும் வரை, தேர்ந்தெடுக்கப்பட்டவராகவும் இருக்கவேண்டும்.

**நிர்வாக சபை**

கழக நிர்வாகத்தை நடத்துவதற்காக அங்கத்தினர்கள் கொண்ட ஒரு நிர்வாகசபை கீழ்க்கண்டபடி நியமனம் பெற்றதாகஇருக்கவேண்டும்.

ஒரு அக்கிராசனர், இரண்டு உப தலைவர்கள், இரண்டு காரியதரிசிகள், ஒரு பிரதம அமைப்பாளர், மூன்று பிரதேச அமைப்பாளர்கள், ஒரு பொருளாளர், ஆகியவர்களும், மற்றும் திராவிடநாட்டின் 24ஜில்லாக்களுக்கு, ஜில்லா ஒன்றுக்கு இருவர் வீதம் 48 அங்கத்தினர்களும், தஞ்சை, திருச்சி, கோவை, சேலம் ஆகிய ஜில்லாக்களுக்கு அதிகப்படியாக 2 மெம்பர்கள் வீதம் 8 அங்கத்தினர்களும், சென்னைக்கு 5 அங்கத்தினர்களும் மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

நிர்வாக சபையாரால் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்கள் பத்துப் பேருக்கு மேற்படாமலும், கட்சித் தலைவரால் தேர்ந்தெடுக்கப்படும் அங்கத்தினர்கள் பத்துப் பேருக்கு மேற்படாமலும் இருக்கலாம்.

குறிப்பு:- பல வகுப்புகளையும், பல லட்சியங்களையும்; பல விசேஷ அவசியங்களையும் கொண்டு தேவைப்படும் ஆதலால் இந்த மேற்சொல்லப்பட்ட 2 பிரிவு அங்கத்தினர்கள் நியமனம் பெறவேண்டியவர்கள் ஆக இருக்கலாம்.

**கமிட்டிக் கூட்டங்கள்:**

மூன்று மாதத்திற்கொருமுறையும், எழுத்துமூலம் பதினைந்து அங்கத்தினர்கள் வேண்டிக்கொண்டபோதும் நிர்வாகசபைக்கூட்டம் கூட்டப்படவேண்டும். இதற்குக் காரியாலய காரியதரிசி பொறுப்பாளர் ஆவார்; காரியதரிசி, நிர்வாகசபைக்கூட்டம், இடம், காலம், விஷயம் முதலியவைகளைக் கட்சித் தலைவரைக் கலந்து அங்கத்தினர்களுக்கு ஒருவாரம் காலங்கொடுத்து ஏற்பாடு செய்யவேண்டும்.

**கோரம்:**

பதவியிலிருக்கும் மொத்த எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பங்கு அல்லது 15 பேர், நடவடிக்கைக்கு ஆஜராகியிருந்தால், காரியம் நடத்தத் தகுந்த கோரமாகும்.

**நிர்வாகக் கமிட்டியின் வேலை முறை:**

கழகத்தின் கொள்கைகளுக்கேற்ற திட்டங்களை வகுக்கவும்; திட்டங்களை நடைமுறையில் நடத்த ஏற்பாடு செய்யவும் பொறுப்புடையதாகவும், தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவருவதும், மற்றும் தேர்தல்களில் கட்சி ஈடுபடும்போது அவைகளை நடத்துவிக்கவும், நிதி (Fund) சேர்க்கவும், நிர்வாகக் கமிட்டிக்குள்ள மேற்கண்ட அதிகாரங்களில் எவற்றையாவது செய்ய அதிகாரம் கொடுத்து சப்-கமிட்டிகள் நியமனம் செய்யவும், மற்றும் அவசரமான காரியங்களில் அவசியமானவைகளைச் செய்யவும் ஜில்லா, தாலுக்கா முதலிய கிளை ஸ்தாபனங்கள் அமைப்புப் பற்றியும், மற்றும் நிர்வாக சம்பந்தமான ஒழுங்கு முறை பற்றியும் உப விதிகள் செய்யவும் நிர்வாகக் கமிட்டி அருகதையுடையதாகும்.

விதி முறைகள் திருத்தப்பட வேண்டி ஏற்பட்டால், அவைகள் நிர்வாகக் கமிட்டியில் ஆலோசிக்கப்பட்டு, கான்பெடரேஷனில் முடிவு செய்யப்படவேண்டும்.

காரியதரிசிகள் இருவரில் ஒருவர் காரியாலய நிர்வாகம், காரியாலய வேலை, கடிதப் போக்குவரத்துஆகியவைகளுக்குப் பொறுப்பாளராவார்; மற்றொருவர் பிரசார இலாகா முதலிய வெளி வேலைகளுக்குப் பொறுப்புடையவராவார். காரியாலயக் காரியதரிசி 'ஆனரோரியம்' பெறத்தக்கவராக இருக்கலாம்.

பிரதம அமைப்பாளர் மாகாண முழு அமைப்பிற்குப் பொறுப்பாளராகவும், பிரதேச அமைப்பாளர் அவரவர்களுக்கு நிர்வாகக் கமிட்டி அவ்வப்போது ஏற்படுத்தும் பிரதேசத்திற்குள் அமைப்பு, அங்கத்தினர் சேர்த்தல் ஆகியவைகளுக்குப் பொறுப்பாளராகவும் இருப்பார்கள்.

பொருளாளர் கழக நிதி காப்பாளராகவும், கழக நிர்வாக சபைத் தீர்மானங்களை அநுசரித்து நிதி விநியோகிக்கவும் பொறுப்புடையவராகவும் ஆவார்.

வருஷம் ஒருமுறை பொது மாநாடு (Confederation) நிர்வாக சபை அனுமதிக்கும் இடத்தில் கூட்டப்படத்தக்கதாகும்.

கட்சித் தலைவர், அக்கிராசனர், காரியதரிசி ஆகியவர்களுடன் கலந்து அவசரமாய் செய்யவேண்டிய காரியத்தைச் செய்யலாம். இப்படிப்பட்ட நடவடிக்கைகள் அடுத்த நிர்வாக சபைக் கூட்டத்திற்குத் தெரியப்படுத்திவிட வேண்டும்.

கட்சித் தலைவரும், அக்கிராசனரும் எல்லா சப்கமிட்டிகளிலும் பங்கு

கொள்ள உரிமையுடையவர்கள் ஆவார்கள்.

காரியக்கமிட்டி:

24 அங்கத்தினர்களை, அதாவது தலைவர், அக்ராசனர், காரியதரிசிகள், பொருளாளர் உட்பட 24 அங்கத்தினர்கள் கொண்ட காரியக் கமிட்டியைத் தலைவர் நிர்வாகக் கமிட்டியிலிருந்து நியமிக்கவேண்டியவராவர்.

அவர்கள் நேரடியாகக் கட்சி நிர்வாகக் காரியங்களையும், நடைமுறைக் காரியங்களையும் நடத்தத்தக்கவர்களாவார்கள்.

காரியக்கமிட்டி அப்போதைக்கப்போது செய்யும் காரியங்கள் நிர்வாகக் கமிட்டியாரே செய்ததாகப் பாவிக்கப்பட்டு ஆமோதிக்கப்படும்.

முன்: சி. என். அண்ணாதுரை.
பின்: கே. கே. நீலமேகம்.

(இதர தீர்மானங்கள் அடுத்த இதழில்)

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

## சிறப்பான செய்திகள்

நம் கட்சி எதிரிகளைப் பற்றியும், துரோகிகளைப்பற்றியும், தொல்லைகொடுக்க முயற்சித்துத் திரியும் விஷமக்காரர்களைப் பற்றியும் மாநாட்டு நடவடிக்கைகளில் பேச்சுக் கிளம்பிய போதெல்லாம் பெரியார் கண்டிப்பான முறையில் அடக்குமுறை போட்டு அடக்கிக்கொண்டே இருந்தார்.

இவ்வளவு பெரியகூட்டம் இரண்டு நாளாக நடந்துகொண்ட முறையும், எவ்வித சிறுகூச்சல்குழப்பம் இல்லாமல், அதுவும் அவரவர்கள் அபிப்பிராயத்தைத் தாராளமாய்வெளியிடவும்எந்ததீர்மானத்தையும் எதிர்த்து யாரும்ஆசைதீரப்பேச அனுமதி கொடுத்தும் ஒரு சிறு சப்தமும், கட்டுப்பாட்டுக்கு மாறான உணர்ச்சியும், இல்லாமல் மிகப் படித்த, நாகரீகப்பெருந்தன்மைகொண்ட மேனாட்டு மக்கள் கூட்ட நடவடிக்கை போல் அமைதியாக, கௌரவமாக நடந்தது என்று சொல்ல இதைவிட வேறுக்கூட்டம் எதையும் 2வது 3வதாக ஒப்பிடவும் முடியாது என்றே சொல்லலாம்.

ஆயிரக்கணக்கான பெண்கள் அளவுக்கு மீறியகுழந்தைகள், பல துறை, பல அபிப்பிராயம், பல கட்சி மக்கள் யாவரும் ஒன்றாய்க் கலந்து இருந்தும் இரண்டு நாளும் ஒரு சிறு சாமான் திருட்டோ, சிறு வாக்குவாதமோ, சிறு குழப்பமோ குறைபாடோ சொல்லுவதற்கு இடமில்லாமல் கூட்டம் நடந்ததும், தலைவரிடம் மக்கள் காட்டிய அன்பும், மரியாதையும் இணை சொல்ல முடியாதது என்றே சொல்லலாம். தலைவரும் இரண்டு நாளும் சாதாரணத் தன்மையில் மேல் வேஷ்டியும், உடன் இரும் கூட இல்லாமல் ஒவ்வொரு பிரதிநிதியையும் அவர்களது ஜாகையையும் நேரில் கண்டு பேசி விசாரித்து வந்த வண்ணமே இருந்தார். தலைவர் ஆயிரம் பிரதிநிதிகள் அடங்கி இருந்த டாக்டர் மதுரம் அவர்கள் மருந்து செய்யும் கொட்டகையில் அவர்கள் மத்தியில் அங்கேயே இரண்டு நாளும் சாப்பிட்டுக்கொண்டும் படுத்துக்கொண்டும் பாதுகாத்துக்கொண்டுமே இருந்தார். வந்திருந்த பெண்கள் தலைவரிடம் மிக்க அன்பும் மரியாதையும் காட்டி மகிழ்ந்த வண்ணம் இருந்தார்கள். பிரதிநிதிகளும் ஒருவருக்கொருவர் "என்னிடம் தலைவர் பேசினார்", "என் பெயரை 10 வருஷத்துக்கு அப்புறம் ஞாபகம் வைத்திருந்தார்" என்பதுபோன்ற சொல்லாடல்கள் நிகழ்த்திக்கொண்டே இருந்தார்கள்.

பிரதிநிதிகள், மிருகக்காட்சி சாலையில் பேசிக்கொள்வது போல் இவர்தான் வேதாசலம், இவர்தான் திராவிடமணி, இவர்தான் அழகிரி, இவர்தான் அன்பழகன், மதியழகன், நெடுஞ்செழியன், ஜனார்த்தனம், தவமணி; இவர்தான் பாரதிதாசன், இவர்தான் இராதா; இவர் சின்னத்தம்பி, மிராண்டா என்பதுபோல் ஒவ்வொரு இயக்கத் தோழரையும் 100க் கணக்கானவர்களை ஒருவருக்கொருவர் கைகாட்டிக் காண்பித்து மகிழ்ந்தவண்ணம் இருந்தார்கள்.

தோழர்கள் வேதாசலம், ஆ. திராவிடமணி இவர்களது முயற்சியும், தொண்டுமே இந்த மாநாடு என்றால் எவரும் ஆட்சேபிக்கவோ பங்கு கேட்கவோ திருத்தம் கொண்டுவரவோ முடியாது என்போம். பொன்மலைத் தோழர், உள்ளூர் இளைஞர் உற்சாகமும், சலியாத் தொண்டும் மாநாட்டுக்குப் பெருமையளித்தன என்பதும் அதுபோன்றதே. யாரும் இதுவரை காணாத முறையில் சென்னை, செங்கற்பட்டு தவிர மற்ற 9ஜில்லாக்களும்அவரவர்கள் ஒப்புக்கொண்டதற்கு மேலாக, ஒன்றுக்கு ஒன்றரையாக துணை-பிரதிநிதிகள் சேகரித்து அனுப்பின.

சுமார் 10 ஆயிரத்திற்குக் குறையாமல் பணம் வசூலாயிற்று. கணக்குப் பின்னால் வரும். அதாவது வெளியில் டிக்கட்டு பெற்று வெளி மக்களிடம் வசூல் செய்த மக்கள் கணக்கும் பணமும் வந்த உடனே கணக்கு வெளியாகும்.

---

## வேண்டுகோள்

வெளியூர் வசூல்காரர் உடனே கணக்கு முடித்துப் பணத்துடன் அனுப்புக.

## மறுப்பு

22-9-45 வெளியான "குடி அரசு', 12-வது பக்கம் 3-வது பத்தியில் "2-மண மகன் தேவை" என்ற தலைப்பில் வெளியாகியுள்ள செய்தி உண்மையாகத் தம்மால் அனுப்பப்பட்டதல்லவென்று மோகனூர் தோழர் எம்.பி. பெரியசாமி எம். எல். ஏ., தெரிவிக்கிறார்.

குறிப்பு: இம்மாதிரி தவறான செய்தியை அனுப்பிய தோழரைக் கண்டிப்பதோடு இதை வெளியிட்டதற்கு மிகவும் வருந்துகிறோம்.

—ஆசிரியர்

## தோழர் இராமலிங்கம்

புதுச்சேரி, முத்தால்பேட்டை, சகுந்தலா சாயத் தொழிற்சாலை உரிமையாளர் தோழர் பொ. இராமலிங்கம் அவர்கள் திருச்சி மாநாட்டிலிருந்து வந்து இயக்க சம்பந்தமாகவும் தொழில் விஷயமாகவும் ஈரோட்டில் பெரியாரவர்களைக் கண்டு மூன்று தினங்களாகப் பேசிக்கொண்டிருந்து விட்டு 3—10—45 சேலம் சென்றார்.

# திராவிட நாட்டுச் செய்திகள்

இரட்டணை கிராம முக்கியஸ்தர் தோழர் முத்துக்கிருஷ்ணா ரெட்டியார் அவர்களால், தம் மாமனார் நினைவு நாளை முன்னிட்டு ஆகஸ்டு 23, 24, 25 தேதிகளில் சுமார் 3000 மக்களுக்கு உணவளிக்கப்பட்டது, துணிகளும் வழங்கப்பட்டன.

* *

திருவையாறு மருத்துவர் சங்கத் தொடக்க விழா 6-9-45 காலையில் டாக்டர் டி. எம். பிள்ளை தலைமையில் மேளவாத்தியங்களுடன் சிறப்பாக நடைபெற்றது. டாக்டர் பாலகிருஷ்ணன் திறப்புவிழா ஆற்றினார். தோழர் கடராஜ பவேதி பி. ஏ. (ஆனர்ஸ்) கொடியேற்றினார். தோழர்கள் மகிழ்நன், கோவிந்தராஜ் இன்னிசை நிகழ்த்திய பின், தோழர்கள் அகோரம், ராமசாமி, ஆறுமுகம், முருகையன், ராமசாமி செட்டியார், துரைராஜ் கோபிநாத் ஆகியோர் பேசினர். தீர்மானங்கள் நிறைவேறிய பின் செயலாளர் நன்றி கூறலுடன் விழா முடிவுற்றது.

* *

ராசிபுரம் மருத்துவ விவசாயிகள் சங்கம் 6-9-45ல் அமைக்கப்பட்டது. தோழர்கள் ப. பழனி தலைவர், ரா. பழனி உபதலைவர், வ. பெரியண்ணன் செயலாளர், ப. முருகன் துணைச்செயலாளர், ரா. குப்புசாமி பொருளாளர் என்று தெரிந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் சென்னன், காயலாமலை, அர்த்தநாரி ஆகியோர் பேசினர்.

# உலகப் புகழ்பெற்றவை!

பர்மா, மலேயா, சிலோன், தென்னாப்பிரிகா, முதலிய வெளிநாடுகளிலும், இந்தியாவின் வட மாகாணங்களிலும், தமிழ்நாட்டைப் போலவே சிறந்து விளங்குகின்றன

★

# குரு மருந்துகள்

80 வருட அனுபவம்!

1872 வரு முதல் ஆங்கில முறையும் இணைப்பு!!

(CHILDREN'S HEALTH SET)

## குழந்தைகள் பாதுகாப்புக்கு

1 செட் 7 ஔஷதங்கள்

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| குரு ஹெல்த் மாத்திரை | 0 | 12 | 0 |
| குரு கஸ்தூரி கார மாத்திரை | 0 | 12 | 0 |
| குரு கோரோஜனை மாத்திரை | 0 | 12 | 0 |
| குரு வயிற்ரோட்ட மருந்து | 0 | 14 | 0 |
| குரு வேப்பெண்ணை தைலம் | 1 | 4 | 0 |
| குரு சொட்டுமருந்து (கக்குவானுக்கு) | 2 | 0 | 0 |
| குரு பாலர் டானிக் | 2 | 0 | 0 |

வி. பி. பி. பிரத்தியேகம்

உங்கள் ஊர்களிலுள்ள மருந்து வியாபாரிகளிடமோ, ஷாப்புகளிலோ குரு மருந்துகளைப் பெறலாம் இல்லாவிட்டால் உடனே எழுதுங்கள்.

விபரங்களுக்கு:—

**டாக்டர் எ. மதுரம் சன்ஸ்,**

குரு மருந்துசாலை ...... திருச்சினாப்பள்ளி.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மொத்த விஸ்திரணத்தில் 4-ல் 5-ல் ஒரு பங்கு விஸ்தீரணமுள்ள பரப்பைச் சேர்ந்த நாம்; இந்தியாவின் சரி பகுதிக்கு மேற்பட்ட துறைமுகங்களைச் சேர்ந்த நாம் நம் நாட்டைப் பற்றிய அதன் குறைகள், சுரண்டுதல் பற்றிய கவலை ஏற்பட முடியாதவர்களாக ஆகி; மற்ற மாகாணக்காரர்கள் கொள்ளைக் கூட்டத்தார் போல் வந்து சகல துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தி சத்துக்களை சுரண்டிக் கொள்ளைகொண்டு போவதைப்பற்றியும் கவலை ஏற்பட முடியாதவர்களாகஆகி விடுவதோடு, ஒருசமயம் கவலை ஏற்பட்டாலும்கூட அதற்குநம எதிரிகளால் துவேஷ உணர்ச்சி என்று பேர் வைக்கப்பட்டு, "தேசபக்த"க் கூட்டத்தில் இருந்து விலக்கப்பட்டவர்களாக ஆக்கப்பட்டு விடுகிறோம். எப்படி எனில் இப்போது நாம் உண்மையிலேயேபார்ப்பனர்களைவிட சமுதாயத்தில் கீழ்ப்படுத்தப்பட்டவர்களாயிருந்து, பழக்கம், வழக்கம், உரிமை, சலுகைஆகியவைகளில் வேறுபட்டிருந்து கொண்டு தாழ்ந்த நிலையில் இருத்தப்பட்டு இருப்பதை மாற்றிக்கொள்ளுவதற்கு ஆக என்றே கவலை கொண்டு நம் சமுதாயத்தின் பேரைச் சொல்லிக்கொண்டு நாம் செய்யும் முயற்சிக்கு இன்று வகுப்புத் துவேஷக் கூட்டம்,வகுப்புத் துவேஷக் கட்சி என்று பெயர் ஆகி தேசீயத்திலிருந்து விலக்கப்பட்டவர்கள் என்கின்ற பெயர் இடப்பட்டு எப்படி அது சர்க்காராலும்கூட அனுமதிக்கப்பட்டுவிட்டதோ அது போல் நாம் இந்தியர், பாரதியர், இந்துக்கள் என்று சொல்லிக்கொண்டுதிராவிடநாட்டுப்பாதுகாப்பை, நலனைப் பற்றிச் சிந்தித்தால் கண்டிப்பாக அது தேசத் துவேஷம், நாட்டுத் துவேஷம் கொண்ட கட்சி என்று பழிசொல்லப்பட்டுவிடும் என்பதோடு நாமும் அலட்சியப்படுத்தப்பட்டவர்களாக ஆகிவிடுவோம் என்பதில் ஐயம் இல்லை.

ஆகையினாலேயேதான் சென்னை மாகாணத் திராவிட மக்களாகிய நாம் அந்த மூன்று பெயர்களையும் நீக்கிவிட்டு நமக்கு திராவிடர், திராவிட நாட்டவர், திராவிட சமயத்தவர் என்று சொல்லித் தீர்மானித்துக் கொண்டு இருப்பதோடு, இந்தப்படியான திராவிட நாட்டை சற்றேறக் குறைய மைசூர், திருவாங்கூர் முதலிய சுதேச சமஸ்தானங்கள்போன்று, அதாவது இந்திய மத்திய அரசாங்கத்தின்—கவர்னர் ஜனரல் என்பவரின் ஆதிக்கத்தில், ஆட்சியில் இல்லாமல் தனி நாடாக முழு சுதந்திரமுள்ள ஆட்சி நாடாக ஆக்கவேண்டும் என்றும் தீர்மானித்துக்கொண்டு இருக்கிறோம்.

இந்தப்படி நாம் தீர்மானிக்கக் கூடாது என்பதற்கு இதுவரை யாரும் எவ்வித காரணமோ சமாதானமோ சொன்னதில்லை என்பதோடு விலகிப்போய்விட்டவர்களாலும் சொல்லப்படவில்லை. ஆகையால்தான் அத்தீர்மானங்களுக்குஆக இன்று உங்களுக்கு மறுபடியும் எவ்வித விளக்கமும் சமாதானமும் சொல்லவேண்டிய அவசியம் இருப்பதாக நினைக்கவில்லை. ஆகவே இதுதான் நம் இனம், நாடு, சமயம், ஆகியவைகளில் பேர் மாற்றம் ஏற்பட்டதற்குக் காரணமாகும்.

இனி நம் இயக்கத்தில் அங்கத்தினர்களாக உள்ளவர்கள் சர்க்கார் பட்டம், பதவி, நியமனம் முதலியவைகள் பெறக் கூடாது என்றும், பெற்று இருக்கிறவர்கள் விட்டுவிடவேண்டும் என்றும் செய்யப்பட்டு இருக்கும் தீர்மானமும், சட்டசபைத் தேர்தலுக்கு நம் கட்சியார் அபேட்சகர்களாய் இருக்கக்கூடாது என்று செய்யப்பட்டிருக்கும் தீர்மானமும் பற்றி நான் ஏதாவது புதிதாய் சொல்ல வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்க மாட்டீர்களென்பதோடு இப்போது சொல்லவேண்டிய அவசியமும் இல்லை. ஆனாலும் தேர்தல் சமீபத்தில் வருகிறபடியாலும், பட்டம் பதவி மறுப்பு விஷயமாய் நம்மிலிருந்து விலகியவர்கள் பாமர மக்களிடம் தப்புப் பிரசாரம் செய்து அவர்களை மயக்கப் பார்ப்பதாலும் அவைபற்றிச்சிலசொல்ல ஆசைப்படுகிறேன்.

## பட்டம் பதவிகள்

தோழர்களே,

நம் கட்சியில் அங்கத்தினர்களாக உள்ளவர்கள் சர்க்காரில் பட்டம், பதவி, நியமனம் பெற்றவர்களாகவும், பெறுகிறவர்களாகவும் இருக்கக்கூடாதென்று சேலம் மாநாடு தீர்மானித்ததானது நம் ஸ்தாபனத்தைப் பரிசுத்தமாக்கி, நம் லட்சியத்தைப் பலப்படுத்தி, அதில் நாம் தீவிர அக்கரை உடையவர்கள் என்பதை உலகுக்குக் காட்டி, சர்க்காருக்கு நாம், நமக்கு மானம்,வீரம், தந்நல மறுப்புத்தன்மை, சுயநிர்ணயம் ஆகியவைகள் இருக்கின்றன என்பதை விளக்குவதற்கேயாகும். இந்தத் தன்மைகள் இப்பேர்ப்பட்ட ஒரு பரிதாபகரமான வீழ்ச்சியான சமுதாயத்தின் இயக்கத்திற்கு இருக்கவேண்டியவையேயாகும்; அதுவும் இன்றைய நிலைமையில் மிக மிக அவசியமானவையாகும்; இவற்றையெல்லாம்விட நாம் எந்த மக்களின் மானத்திற்கும், மேன்மைக்கும் பாடுபடுகிறோமோ, அந்த மக்களின் அநுதாபத்தையும், நம்பிக்கையையும் பெறுவதற்கு இன்றியமையாதவையாகும். சாதாரணமாகவே மக்களுக்குத் துறவி என்பவனிடம் இருக்கும் மதிப்பு அரசனிடம் இருக்காது. ஆதலால் நாம் துறப்பதன் மூலம் மதிப்புபெறலாம். நம் இயக்கம் தனது லட்சியத்தை அடைய இந்த 25 ஆண்டு காலமாகச் செய்து வந்து தோல்வி அடைந்த காரியத்தையே இனியும்செய்து கொண்டு இருந்தால் அது பயனளிக்கப் போவதில்லை என்று கருதித்தான் தனது நடைமுறையில் அதன் திட்டங்களை மாற்றிக்கொள்ளத் தீர்மானித்துவிட்டது. அம்மாற்றத்திற்கு ஏற்றபடி மக்கள் தன்மையையும், பணியாற்றுபவர்கள் தன்மையையும் மாற்றிக்கொண்டாக வேண்டும் அல்லவா? மற்றும் நாட்டில் உள்ள மற்ற இயக்கங்களையும், நம் எதிரிகள் வேலை முறைகளையும், சர்க்காரின் நடைமுறைகளையும் நன்றாயறிந்து அவற்றிற்குத் தக்கபடியும் நம்மை ஆக்கிக்கொள்ள வேண்டும்.

சாதாரணமாக, காங்கரசை எடுத்துக் கொண்டீர்களானால் அதிலுள்ளவர்கள் யாவரும், சேருகிறவர்கள் யாவரும் பட்டம், பதவி, நியமனம் ஆகியவைகளை வெறுத்தவர்களும், விட்டவர்களும், விரும்பாதவர்களுமாகவே இருக்கிறார்கள். அதற்காக அவர்களைப் பொது மக்களோ, சர்க்காரோ புறக்கணித்துவிடவில்லை. மரியாதையும், பெருமையும், நலனும் அவர்களை விட்டு விலகிவிடவும் இல்லை. காங்கரஸ் தனது வேலைத்திட்ட முறையாகப் பட்டம் பதவிகளை விட்டுவிடவேண்டுமென்று சொன்னவுடன், உண்மையான பற்றுதலுடன், காங்கரஸ்மூலம் உண்மையான தொண்டுசெய்ய வேண்டும் என்று கருதியவர்கள் உடனே 'சர்' பட்டம் முதல் அநேக பட்டங்களைத் துறந்து விட்டு மக்கள் தொண்டர்களாக முன் வந்தார்கள்; லட்சணக்கணக்கான வரும்படி உள்ள செல்வர்கள், சுகபோக மநுபவித்த சீமான்கள் சாமான்ய மக்கள்போல் நடந்துகொள்ள முன் வந்தார்கள். பல ஆயிரக்கணக்கான மக்கள் சிறை சென்றார்கள். அதனால் மக்கள் மதிப்பையும், சர்க்கார் மதிப்பையும் பெற்று இயக்கத்தையும் உயர்த்திக்கொண்டார்கள் என்பதல்லாமல் அதற்காக ஒருவராவது

இயக்கத்திற்கு எதிரியாகி இயக்கத்திற்கு இழிவு தேட முற்படவில்லை. நம் பட்டதாரிகளைப் (Title holders) பாருங்கள். நாம் இந்தத் தீர்மானம் செய்தவுடன் நம்முடன் ஒத்துவர முடியவில்லையானால் மரியாதையாக விலகி விடுவதை விடுத்து மூன்றாந்தர—நாலாந்தர ஆட்களைப் பண வலிமையால் சேர்த்துக்கொண்டு இயக்கத்திற்குக் கேடு செய்ய நினைத்து மானாவமானத்தையும் லட்சியம் செய்யாமல் நாசவேலைத் தொண்டாற்றுகிறார்கள். ஆனால் காங்கரசில் யாராவது இப்படிச் செய்தார்களா?

உண்மையாக, மனம் விட்டுப் பேச வேண்டுமானால், நம் இழி நிலைக்குக் காரணம் இம்மாதிரி பட்டம், பதவியாளர்களுக்கு உணர்ச்சியில்லாதது ஒரு காரணம் என்றாலும், சர்க்காரார் பெருங்காரணஸ்தர்களல்லவா என்று கேட்கிறேன். சர்க்காரின் அளவுகடந்ததும், நியாயமற்றதுமான சுயநலமும், அதற்காக சர்க்கார் கையாண்ட சூழ்ச்சியுமே தாம், அதாவது சர்க்கார் வேண்டுமென்றே காட்டி வந்த அலட்சிய புத்தியேதான் பெருங்காரணமென்பேன். பிரிட்டிஷ் சர்க்காரின் 200 ஆண்டு ஆட்சி இங்கு நடந்த பின்பும் நாம் இந்திய சமுதாயத்தில் பிறவியிலேயே 4-வது, 5-வது ஜாதி இழிமக்களாகவும், 100-க்கு 90 பேர் தற்குறிகளாகவும் இருக்கிறோமென்றால், இதற்கு நம் எதிரிகள் காரணமா?, சர்க்கார் அதற்கு இடம் கொடுத்தது காரணமா?, என்பதை யோசித்துப் பாருங்கள். இப்படிப்பட்ட சர்க்காரிடம் நாம் நமது அதிருப்தியைக் காட்டாமல், அவர்களுக்கு விசுவாசமுள்ளவர்களாகக் காட்டிக்கொள்ள அவர்கள் கொடுத்த அடிமைக் குறி முத்திரையைக் கழுத்தில் கட்டித் தொங்கவிட்டுக்கொண்டு அவர்கள் முன் வாலாட்டுவதா, என்று கேட்கிறேன்.

அன்றியும், இந்த யுத்தத்தின் போது நாம் நம்முடைய சகல குறைபாடுகளையும், இழிவுகளையும், நமக்கு சர்க்கார் இழைத்துவந்த அநீதிகளையும் மறந்து, மானம், வெட்கமற்றுத் தொண்டாற்றியதற்கு நமக்கு சர்க்கார் செய்த பிரதி நன்றி என்ன என்று பாருங்கள். சர்க்காருக்கு ஒவ்வொரு காரியத்திலும் கேடும், நாசமும் செய்தவர்கள், செய்தாய் வீரம் பேசுகிறவர்கள், இன்று சர்க்காரால் பஹுமானிக்கப் பட்டதோடு பொது மக்களும் அப்படிப்பட்டவர்களின் காலடியில் விழும்படியாக செய்யப் பட்டுவிட்டார்கள். சர்க்காருக்கும், நாட்டுக்கும், மக்களுக்கும் நெருக்கடியான சமயத்தில், நல்ல நாணயமான தொண்டுசெய்து அதனால் பாமரமக்களின் பழிப்புக்கும், வெறுப்புக்கும் ஆளான நம் நிலை என்னவாயிற்று? நாம் ஒருகூட்டத்தார் இப்படி தொல்லை மிகுந்த, தாழ்வான நிலையில் இருக்கிறோம், என்பதை சென்னைக் கவர்னர் மாளிகை முதல் மன்னர் அரண்மனை வரை யாருமே அறிந்ததாகக்கூட காட்டிக்கொள்ளவில்லை. இதன் காரணம் என்ன? நம்முடைய இப்படிப்பட்ட தொண்டுகளுக்காக சர்க்கார் நம்மில் யாரோ இரண்டொரு ஆட்களுக்குப் பட்டம், பதவி, நியமனம் கொடுத்து விட்டதோடு கூலி சரியாய்ப் போய்விட்டது என்பதும், இந்தக் கூலி பெற்ற ஆட்கள் தாம் இந்தக் கூட்டத்தின் பிரதிநிதிகள், எஜமானர்கள் என்பதும், அந்தத் தொண்டுக்கும், இந்தக் கூலிக்கும் சரியாய்ப் போய் விட்டதால் இந்தக் கூட்டத்திற்கு இனி சர்க்கார் பாக்கி இல்லை என்று கருதுவதும் அல்லாமல், வேறு என்ன என்று கேட்கிறேன். ஆனால் காங்கரசில் இந்தப்படி கூலிபெறும் தனித்த ஆட்கள் கிடையாது. ஆதலால் காங்கரஸ் நாசவேலை, கேடுவேலை செய்தாலும் அதற்கும் இரட்டிப்புக் கூலி அந்த இயக்கத்திற்கே கொடுக்கவேண்டியதாகிறது. இதனாலும் தான் நாம் பட்டம், பதவி, நியமனம் முதலாகியவைகளை வெறுத்துத் தள்ளி மறந்தாக வேண்டுமென்கிறோம். இது முடியாது என்பவர்கள் கண்ணியமாக நடந்து கொள்ளட்டும்; கீழ்த்தரமானதும், வெறுக்கத்தகுந்ததுமான காரியம் செய்ய வேண்டாம் என்று வேண்டிக்கொள்ளுகிறேன். சர்க்கார் பட்டங்களை வெறுத்த உண்மையானவர்களுக்குப் பொது மக்கள் பட்டமும், மரியாதையும் கிடைத்தே தீரும்; காரிய வெற்றி மகிழ்ச்சியும், திருப்தியும் ஏற்பட்டே தீரும். ஆதலால் பட்டம், பதவி, நியமனம் போய்விட்டால் எப்படிப் பிழைப்பது, எப்படி மரியாதை, பெருமை வரும் என்று யாரும் பயப்படவேண்டியதில்லை.

இந்துமகாசபையைப் பாருங்கள் ,பட்டம்விடத் தீர்மானித்த உடன் சிலர் 'சர்' பட்டத்தையும் விட்டுவிட்டார்கள். யாரும் பிரிந்துபோய் வேறு கட்சி ஆரம்பிக்கவோ, கட்சிக்குக் கேடு செய்யவோ முனையவில்லை.

## தேர்தல்

இனி தேர்தல் விஷயத்தைப் பற்றிச் சில கூற ஆசைப்படுகிறேன். இங்கு நாம் கூறும் தேர்தல்கள் என்பவை, சமீபத்தில் வரப்போகும் சென்னை சட்ட சபைகள் இரண்டிற்கும், இந்திய சட்ட சபைகள் இரண்டிற்கும் நடக்கும் தேர்தல்களைப் பொறுத்தேயாகும். இந்த நான்கு தேர்தல்களிலும் இதற்கு முன் நாம் நல்ல, பலமான, வெட்கப்படத்தக்க தோல்வியை அடைந்து இருக்கிறோம். தேர்தல்கள் ஏற்பட்ட காலம் முதலிருந்தே நாம் மெஜாரிட்டி அடையாமல், பெரிதும் தோல்வி அடைந்து வருகிறோம் என்றால் அது முழுதும் உண்மையற்றதாக ஆகிவிடாது. மத்தியில் சிறிதுகாலம் ஒன்றிரண்டு தேர்தல்களில் வெற்றிபெற்று 'மெஜாரிட்டி' அடைந்திருந்தோம்; அதிகாரத்திலுமிருந்தோமென்றால் அந்தக்காலம் எதிரி போட்டிபோடாத காலம் அதாவது காங்கரஸ் தேர்தலில் நேரில் நிற்காத காலம் என்பதை மறந்துவிடக்கூடாது. அன்றியும் நம் கட்சி அதாவது ஜஸ்டிஸ் கட்சி என்பதாக ஒன்று ஏற்படுத்தப்பட்டதற்குக் காரணமே தேர்தல்களில், உத்தியோகத்தில், படிப்பில் பார்ப்பனர்களோடு, அவர்கள் கலந்த ஸ்தாபனங்களோடு போட்டிபோட முடியாதபடி, சர்க்கார் நடைமுறை, சட்டவிதி நடைமுறை, மக்கள் தன்மை ஆகியவை இருக்கின்றன. ஆதலால் பார்ப்பனர்களையும், பார்ப்பன சம்பந்த ஸ்தாபனங்களையும் விட்டு விலகி தனிப்பட எத்துறையிலும் அவர்கள் சம்பந்தமே இல்லாதபடி ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தி அதற்குத் தனியாக சில பரிகாரங்களையும், சலுகைகளையும், அதுவும் பொது விதிமுறைகள் என்பவை தவிர தனிப்பட்ட சில சலுகைகள் பெற வேண்டுமென்பதற்காகவே ஆரம்பிக்கப் பட்டதாகும். அதை நாம் சட்டசபை-தேர்தல் துறைகளில் நாளது வரை அடியோடு பெறவுமில்லை; உண்டாக்கிக் கொள்ளவுமில்லையென்பதோடு இந்த சலுகைதேவை என்கிற சாக்கில் யாரோ இரண்டொருவர், அதுவும் பாமர மக்களின் மதிப்புக்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமில்லாதவர்கள் என்பதாக ஆகி தோல்வி பெற்ற இரண்டொருவர் பட்டம், பதவி பெற்று மக்களின் பொறாமைக்கும், வெறுப்புக்கும், விரோதத்திற்கும் ஆளானார்கள் என்பதல்லாமல் இலட்சிய சாத்தியம் சிறிதும் ஏற்பட்டதாக இல்லை.

கடைசியாக ஏற்பட்ட 37-ஆம் ஆண்டு தேர்தலில் நாம் படுதோல்வியடைந்தோம். நல்ல ஆட்களை நிறுத்தினோம்; ஏராளமாகப் பணம் செலவு செய்தோம்; பாமர மக்களிடமும், எதிரிகளிடமும், சர்க்கார் சிப்பந்திகளிடமும் எவ்வளவோ தொல்லைபட்டுக்கொண்டு கூடுமான முயற்சியெல்லாம் செய்தோம்; நம் வாலிப மணிகள் படாதபாடெல்லாம் பட்டார்கள்—முடிவு என்ன?

"ஜஸ்டிஸ் கட்சி 5000 கஜ ஆழத்தில் புதைக்கப்பட்டுவிட்ட"தென்று நமது எதிரிகள் சங்கநாதம்—வெற்றி முழக்கம் செய்தார்கள். சர்க்கார் நம்மைப் பார்த்து வெளியில் பரிதாபச் சிரிப்பும், உள்ளுக்குள் இகழ்ச்சிச் சிரிப்பும் சிரித்தார்கள். தோற்றவர்கள் சுயமரியாதைக் கட்சியின் தாங்கலினால் முக்காடின்றி நிமிர்ந்து நடந்தார்கள்.

நல்ல நம் தலைவர்கள், பிரமுகர்கள் என்பவர்கள், அவமானமும், எதிரிகள் பதவியில் அமர்ந்து செய்த தொல்லை

களும், மிரட்டின மிரட்டல்களும் சமாளிக்கமுடியாமல் கட்சியை விட்டு ஓடினவர்கள் பலர், மறைந்துகொண்டு தலைமறைவாகத் திரிந்தவர்கள் பலர் ஆனார்கள்.

இம்மாதிரியான தோல்வியையும், கதியையும் அடையக் காரணம் என்ன? சிந்தித்துப்பாருங்கள்—அருள் கூர்ந்து சிந்தித்துப்பாருங்கள். நம் எதிரிகளிடமும், சர்க்காரிடமும் இல்லாத குற்றம், நாணயக்குறைவு, உண்மைத் தகுதியின்மை நம்மிடம் என்ன இருக்கிறது? அல்லது கொள்கைகளில், திட்டங்களில் என்ன நியாயமான குறைபாடுகள் இருக்கின்றன? ஓட்டர்களில் நம்மவர்களே பெருமிதமானவர்கள் ஆவார்கள். இப்படியெல்லாம் இருக்க நாம் ஏன் தோற்றோம்? இந்த சிந்தனையில்லாதவர்கள், இவற்றிற்குப் பரிகாரம் செய்துகொள்ள முயற்சிக்காதவர்கள் யாராயிருந்தாலும், அவர்கள் நமக்குப் பிரதிநிதிகளாகத் தகுதி உடையவர்களாவார்களா? என்று கேட்கின்றேன்.

அன்றியும் நாம் இம்மாதிரியான வெட்கப்படும்படியான தோல்வியடைந்ததற்குப் பொது மக்களிடமும், வெளிநாட்டு மக்களிடமும், கவர்னர்களிடமும், வைசிராய்களிடமும், தூதர்-சர் கிரிப்சு முதலியோரிடமும், பார்லிமெண்ட் சபையாரிடமும்-மற்றும் இந்தியா மந்திரிக்கும், பிரிட்டிஷ் பிரதம மந்திரிக்கும்-சியாங்கே ஷேக்கிடமும் என்ன சமாதானம் சொன்னோம்? நினைவுறுத்திப் பாருங்கள்—எதிரிகளின் சூழ்ச்சியையும், சர்க்கார் கையாளும் முறையையும், தேர்தல் யந்திரத்தின் கோளாறையும், பாமர மக்கள் தன்மையையும் பற்றி சமாதானம் சொன்னோமே தவிர, வேறு எதையாவது சொன்னோமா? அப்படியிருக்க இன்று அந்நான்கு தன்மைகளும் மாறி இருக்கின்றனவா? மாற்றப்பட நாம் ஏதாவது முயற்சி செய்தோமா? அல்லது வேறு வகையில் நிலைமை சரிப்பட்டு இருக்கிறதா? என்று பாருங்கள்!

எதிரிகள் நம்மை இழிவாய்த் தாக்கிப் பழிகூறி பாமர மக்களும் வெறுக்கச் செய்ய முன்னிலும் அதிகமான வசதி செய்துகொண்டார்கள். சர்க்கார் நம்மை, நாட்டின் முன்மிகுதியும் மானங்கெட்ட சுயநல மக்கள் என்று ஆக்கிவிட்டார்கள்.

பாமர மக்கள் அணைப்பு, ஆதரவு, நம்பிக்கை, நல்லெண்ணம் ஆகியவைகள் முன்னிலும் அதிகத் தூரமாகிவிட்டன.

இவ்வளவும் போதாமல் நமக்குள்ளும் கட்டுப்பாடோ, ஒற்றுமையோ, ஒருவரிடம் ஒருவருக்கு நம்பிக்கையோ, ஒரு பொதுவான லட்சியமோ காண்பது மிக மிகக் கஷ்டமாகப் போய்விட்டது.

ஆகவே 1936-ஆம் ஆண்டைவிட 1945-ஆம் ஆண்டு எந்த வகையில் தேர்தலுக்கு அநுகூலமாயிருக்கிறது என்று கேட்கிறேன். ஓட்டர்கள் கண்களை மூடிக்கொண்டு, நாம் "நான் பார்ப்பனரல்லாதவன்; ஆகையால் ஓட்டுப் போடு" என்று கேட்ட மாத்திரத்தில் நமக்கு ஓட்டுப் போடும்படியான பைத்தியக்காரர்களென்று கருதிவிட முடியுமா?

அவர்கள் நம்மைப் பார்த்து, "நாட்டில் பார்ப்பனர்கள் எது? எல்லோரும் பார்ப்பனரல்லாதவர்கள் தாமேயொழிய வேறு யார் இருக்கிறார்கள்? நமக்கும்; பார்ப்பனர்களுக்கும் என்ன வித்தியாசம், எதில் இருக்கிறது?" என்று கேட்டால் நம் அபேட்சகத் தோழர்கள் சர் பி. டி. ராஜன் முதல் டாக்டர் கிருஷ்ணசாமி இடையாக, பி. பாலசுப்பிரமணியம் என்பவர் ஈறாக உள்ளவர்கள் பார்ப்பனர்களுக்கும், தங்களுக்கும் என்ன வித்தியாசம் காட்டி, தங்களைப் பிரித்துக் காட்ட முடியும்?,என்று பாருங்கள். உதாரணத்திற்கு இந்தப்பெயர்களைக்குறிப்பிட்டேன். மற்றும் இன்று வேறு காங்கரஸ் பார்ப்பனரல்லாதார்தான் ஆகட்டும் அவர்களுக்கும் நமக்கும் என்ன பேதம் காட்ட முடியும் என்று பாருங்கள். அன்றியும் இன்று ஓட்டர்கள் ஜாதி, மதம், வகுப்பு, படிப்பு, பணம் ஆகிய எதையும் கவனியாமல் "தகுதி" ஒன்றையே பார்க்கிறார்கள். அந்தத் தகுதிக்கு உரைகல் ஓட்டரிடம்தான் இருக்கிறதே தவிர, வேறு யாரிடமுமில்லை என்று சொல்லலாம். அதாவது, ஓட்டர்கள், அபேட்சகர்கள் ஜெயிலுக்குப் போனவர்களாக இருக்க வேண்டுமென்றும், தண்டவாளம் பெயர்த்து, ரயிலைக் கவிழ்த்து, ஆபீசுகளுக்கு நெருப்பு வைத்து, தந்திக் கம்பிகளை அறுத்து, அதிகாரிகளைக் கொன்றவர்களாக இருக்க வேண்டுமென்றும், அப்படிச் செய்ய வசதியில்லாதவனாயிருந்தாலும், "அதற்கு நான் பொறுப்பாளி", "நான்தான் அப்படி செய்யச்சொன்னேன், செய்தவர்களைப் பாராட்டுகிறேன். செய்தவர்களுக்குத் தங்கத் தோடா, தங்கக் கத்தி கொடுக்கிறேன், அப்படிச் செய்து கஷ்டப்பட்டவர்களுக்குப் பண உதவி செய்கிறேன்", என்றாவது சொல்லுகிறவனாக இருக்கிறானா என்று பார்க்கிறார்கள். இதைத்தான் முக்கிய தகுதியாகக் கருதுகிறார்கள், இந்த ஓட்டர்களிடம் ஓட்டுக் கேட்க நம்மவர்கள் என்பவர்களிடம் என்ன யோக்கியதை இருக்கிறது, என்று யோசித்துப் பாருங்கள். வைசிராய் பிரபுவும் இந்தக் தகுதிக் கூட்டத்தைப் பார்த்து "நீங்கள் செய்ததை நான் மறந்துவிட்டேன்; நான் செய்ததை நீங்கள் மறந்துவிடுங்கள்", என்று கேட்டுக் கொண்டு விட்டார் என்றாகிவிட்டது. வைசிராய் பிரபு,அவர்கள் செய்ததைமாத்திரம் மறந்துவிடவில்லை என்பதோடு, அப்படிச் செய்யாதவர்களையும், 'செய்ய வேண்டாம்' என்று சொன்னவர்களையுங்கூட அடியோடு மறந்துவிட்டார். இந்த நிலையில் ஓட்டர்கள் மறந்தாவது, நமக்கு ஓட்டுப்போடுவார்களா, என்பதை யோசித்துப் பாருங்கள்.

இந்த யுத்தத்திற்குப் பணஉதவி செய்ததும், பணம் உதவி செய்யும்படி மக்களுக்குச் சொன்னதும், பட்டாளத்தில் மக்களைச் சேரச்சொன்னதும், ஓட்டர்களுக்கு மாபெரும் தேசத்துரோகமான காரியமாகக் கருதும்படி செய்யப்பட நம் எதிரிகளுக்குச் சவுகரியம் ஏற்பட்டுவிட்டதுடன் அவர்கள் அதை வெகுதுணிவாக செய்தும் வருகிறார்கள் என்பது மறைக்கக்கூடியதாயில்லை. இந்த நிலையில் பார்ப்பனரல்லாதார் என்பவர்களோ, ஜஸ்டிஸ் கட்சியார் என்பவர்களோ தேர்தலுக்கு நிற்பது என்பது அறிவுடைமை ஆகுமா, காரியசாத்தியமானதாகுமா, என்று யோசித்துப் பாருங்கள்.

சர்க்காரார் தேர்தலை ஜனநாயகத்துக்கும், ஜனநாயக ஆட்சிக்கும் அடையாளம் என்கிறார்கள். நம் எதிரிகளும் அந்தப்படியே சொல்லி, மக்களையும் வெற்றிக்கு ஏற்ப சரிப்படுத்திக்கொண்டு வெற்றி பெற்றுத் தாங்கள் தாம் ஜனப்பிரதிநிதிகள் என்றும், தாங்கள் ஆட்சி செயல் ஏற்பட்டால்தான் அது ஜனநாயக ஆட்சி என்றும் சொல்லிவருகிறார்கள். நாமோ, நான் மேலே கூறியது போல், நம் கட்சி ஆரம்பித்த கால முதல் தேர்தலை ஜனநாயகமாக ஒப்புக்கொள்ளாமல் தனிப் பாதுகாப்புக் கேட்டு வந்திருப்பதோடு, சென்ற தேர்தலில் வெற்றிபெற்ற காங்கரஸ் ஆட்சியை ஜனநாயக ஆட்சி அல்ல என்று சொல்லி எதிர்த்து வந்திருக்கிறோம். அதோடு மாத்திரமல்லாமல் யுத்தத்தில் நாம் நிபந்தனையில்லாத ஒத்துழைப்பாளர்களாய் இருந்த காலத்திலும், சர்க்காரை யுத்தம் முடிந்தவுடன் செய்யப்போகும் எவ்வித அரசியல் காரியங்களுக்கும், மாறுதல்களுக்கும் நமக்குத் தனி பாதுகாப்புத் தரவேண்டும் என்றும் கேட்டிருக்கிறோம். அரசாங்கத்தாரும், அரசர், பிரதம மந்திரி, இந்தியா மந்திரி, பார்லிமெண்ட் மெம்பர்கள், வைசிராய் முதல் இந்தியாவின் நிலையை உணர்ந்ததாகவும், பார்ப்பனர் கொடுமை, சூழ்ச்சி, காங்கரசின் பித்தலாட்டத் தன்மை ஆகியவைகள் தெரிந்ததாகவும் சொல்லி, "இங்கிலாந்தில் இருக்கும்படியான ஜனநாயகம் இந்தியாவுக்குப் பொருந்தா"தென்றும், "இந்தியா பல இனம், பல மதம், பல லட்சியப் பிரிவு கொண்ட நாடு" என்றும்,"தனித்தனியாகக் கவனிக்கப்படவேண்டும்" என்றும் சொல்லியும், பிரகடனம் செய்தும் நம்மை யுத்தத்துக்குத் தொண்டாற்ற, ஊக்கப்படுத்தி வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் இவற்றிற்கு ஏற்ற எவ்வித மாறுதலும், பாதுகாப்பும், கவனித்த அறி

குறியும் இல்லாமல் பழைய நிலை கொண்ட தேர்தலுக்கு நாம் நிற்பது என்றால், சர்க்காரார் தாங்கள் சொன்ன பேச்சுப்படி நடக்கவில்லை என்பதை நாம் லட்சியம் செய்யவில்லை என்பதோடு, நாம் இதற்கு முன் தேர்தலில் வெற்றிபெறாததற்குச் சொன்ன காரணம் உண்மையல்லவென்றும், போலி சமாதானம் என்றும் ஆகிவிடவில்லையா என்றும் யோசித்துப்பாருங்கள்.

நாம் நம் திராவிட நாட்டுப் பிரிவினை கேட்கிறோம். அஃதன்றி நமக்கு வாழ்வு நலம் கிடையாது என்று முடிவு செய்துவிட்டோம். அதுவரை தேர்தலில் நிற்க தனித்தொகுதி கேட்கின்றோம். இந்த இரண்டும் சர்க்கார் ஒப்புக்கொள்ளவில்லை. நம் எதிரிகளும் தடுக்கிறார்கள். அப்படி இருப்பதோடு இந்தப் பிரச்சினைமீது நாம் தேர்தலுக்கு நிற்கத் தகுதியாகிவிடவுமில்லை. நம் எதிரிகளாகிய பார்ப்பனர்களுக்கு வயதுவந்த ஆண் பெண் பாலர் இருவருக்கும் ஓட்டுரிமை இருப்பதுபோல், நம்மில் யாவருக்கும் ஓட்டுரிமையில்லை. பார்ப்பனர் வயதுவந்தவர்களில் 100க்கு 100 பேர் படித்திருப்பது போலும், அரசியல், வகுப்பு உணர்ச்சி, இனப்பற்று இருப்பது போலும், நம்மவர்களுக்கு 100க்கு, 5, 10 பேருக்குக்கூட இல்லை. நம்மவர்களில் படித்தவர்களே 100க்கு 10 பேர்கள். அவர்களிலும் பெரும்பாலோருக்கு அரசியல் வகுப்பு உணர்ச்சி, இனப்பற்று என்பவை மிகமிகக் கொஞ்சமென்றே சொல்லலாம். இந்த நிலை எப்படிச் சம நிலையாகும். 100க்கு 10 பேர்கள் படித்தவர்களும், 100க்கு 10 பேர்கூட ஓட்டர்கள் இல்லாதவர்களுமாக இருக்கும் தன்மையில் நடக்கும் தேர்தல் எப்படி ஜனநாயகமாகக் கருதப்படக்கூடும், என்று பாருங்கள்.

100க்கு 100 பேர் படித்து அதிகார பதவியிலும், முக்கியஸ்தானங்களில் நன்றாய்ப் பழிவாங்கி அழுத்திவிடும் தன்மையோடு உட்கார்ந்துகொண்டு சமுதாயம், மதம் ஆகியவைகளில் மேல் நிலைமையில் இருந்துகொண்டு பாமர மக்களுக்குப் பூலோக தெய்வமாக-உயர்ந்த பிறவியாக இருந்து சகல துறைகளிலும் செல்வாக்குப் பெற்று ஆதிக்கம் செய்கிற மக்களைத் தேர்தலில் நம்முடன் போட்டி போட ஒரு தொகுதியில் விட்டால், அந்த வெற்றி அல்லது தோல்வி ஜனநாயகத்துக்கு அடையாளமா, என்று கேட்கிறேன். இதை ஜனநாயகம் என்று ஒப்புக்கொள்ளும் மக்களைவிட அரசியல் ஞானமற்றவர்கள் உலகில் இருக்கமாட்டார்களென்று வன்மையாய்க் கூறுவேன். அன்றியும், இந்தத் தேர்தலில் நாம் நிற்பதுமாத்திரமல்ல, ஓட்டுப்போடப் போவதுகூட இந்தப் படுமோசமும், சூழ்ச்சி வலையுமான ஜனநாயகத்தை ஒப்புக்கொண்டவர்களாகவும், பயன்படுத்திக்கொள்ள சம்மதித்தவர்களாகவும் ஆகிவிடுவோம்; இந்த நாட்டு மக்கள் நாடு பிரிவினையை ஒப்புக்கொள்ளவில்லை என்று எதிரிகள் சொல்லவும், சர்க்கார் நினைக்கவும் இடம் கொடுத்தவர்களாகிவிடுவோம். எனவே இந்தத் தேர்தலில் பங்குகொள்ளுவதும், பகிஷ்காரம் செய்வதும்தான் நமது இயக்கத்தின் இலட்சியத்தையும், நாணயத்தையும், அறிவுடைமையையும் பொறுத்ததாகும்.

நாம் நம்மை வலுப்படுத்திக்கொள்ள வேண்டும். ஓட்டுக்கு நல்ல விலை கொடுக்க, அதுவும் இன்று செல்லுபடியாகும் நாணயத்தில் ("ரூபா"யில்) விலை கொடுக்கத்தக்க செல்வர்களாக நாம் ஆகிக்கொள்ளவேண்டும். நம்மவர்களையெல்லாம் அரசியல் அறிவுடையவர்களாகச் செய்யவோ, அல்லது அவர்களை வசப்படுத்தவோ தகுதியுடையவர்களாக ஆகிக்கொள்ளவேண்டும்.

சர்க்கார் நம்மை மதிக்கும்படியாகவும், நம்மையும் சரிப்படுத்திக்கொண்டாக வேண்டும் என்பதாகவும் நம் நிலை இருக்கவேண்டும். இவை இல்லாமல் பணம், தகப்பன் பெருமை, அதிகாரிகள் நேசம், வைவதில் ஈனத்தன்மை ஆகிய இவைகள் இருந்தால் வெற்றி கிடைத்துவிடும் என்று யாராவது கருதினால், அது தங்களது முட்டாள்தனம் மாத்திரமல்லாமல் உலகத்தையே முட்டாள்கள் என்று எண்ணியதை ஒக்கும்.

விளம்பரத்திற்கும், சர்க்கார் கவனத்திற்குத் தங்கள் பேர் தெரிவதற்கும், பணம் வசூல் செய்யவும், தேர்தலுக்கு நிற்கவேண்டுமானால் தனிப்பட்ட முறையில் யாரும் நிற்கலாம். இதற்காக ஒரு இயக்கத்தின் பெயரைச் சொல்லுவதும், ஒரு சமூக மக்களுக்குப் பிரதிநிதி என்று சொல்லுவதும் அரசியல் நாணயம் ஆகாது என்று சொல்வேன்.

தோழர்களே,

நாம் மிகக் கீழான நிலையில், மிக்க இழிவான தன்மையில் அழுத்தப்பட்டு இருக்கிறோம். நமக்கு சட்ட சபையில் இன்று வேலையில்லை; செல்லவும் முடியாது; அங்கு சென்றாலும் பேச்சு விளம்பரம் தவிர வேறொன்றும் செய்ய முடியாது; அதையும் எதிரிகள் தங்களிஷ்டம்போல் திருத்திவிடுவார்கள். அரசாங்கமும் தீர்மானத்தைத்தான் லட்சியம் செய்யுமே தவிர, பேச்சை லட்சியம் செய்யாது. ஆகவே பயனற்றதும், முடியாததும், நம் நிலையை, கொள்கையைப் பாழ்படுத்திக் கொள்வதுமான தேர்தலில் சம்பந்தப்பட்டு மானமழிந்து வாழக்கூடாதென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களிடம் நம்பிக்கை பெறுங்கள்; மக்களை ஒன்றுபடுத்துங்கள்; மக்கள் பலத்தை ஒன்று திரட்டுங்கள்; தியாகத்திற்கும், தந்நல மறுப்புக்கும் மக்களைத் தயார் செய்யுங்கள்; அதற்கு வழி காட்டுங்கள். நீங்காத, நீண்டநாளைய இழிவை நீக்கிக்கொள்ள நம்முடைய எதையும் விடவும், எப்படிப்பட்ட கஷ்டத்தையும் அநுபவிக்கவும் தயாராயிருங்கள்.

போராரங்கம் அதோ கண்ணுக்குத் தெரிகிறது, புறப்படுங்கள்; மார்பில் குண்டு வாங்க நிமிர்ந்து வாருங்கள்; ஓடி ஒளியாதீர்கள்; கோழைகளாக வாழ்வதை, சுயநலக்காரர்களாக வாழ்வதை, மானமற்றவர்களாக வாழ்வதை வாழ்வென்று கருதாதீர்கள்.

தோழர்களே,

என்னை நான்காம் முறையும் உங்கள் தலைவனாகத் தேர்ந்தெடுத்ததற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எனது முன்னுரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

---

## பெரியார் பிறந்தநாள் விழா

### யானைமீது ஈ. வெ ரா, படம்

15-9-45 கல்வார்பட்டி சுயமரியாதைத் திராவிடர் கழகத்தினர் முயற்சியில் யானையின் மீது பெரியார் படத்தை வேங்கடாசலன் தாங்கிவர இலவச வாசகசாலையிலிருந்து தப்பட்டை, கொம்பு, நாதசுர முழக்கத்துடன் வாழ்த்தொலி வானைப் பிளக்க மாபெரும் ஊர்வலம், முக்கிய தெருக்கள் வழியாகக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்ட தலைவாசல் அரசமரத்தடி மைதானத்திற்கு மணி 3½-க்கு வந்து சேர்ந்தது. தோழர் வி. இராமசாமிப் புலவர் தலைமையில் பெரியாரின் வாழ்க்கை வரலாறு, சேவை முதலியன பற்றி தோழர் வீராசனால் பேசப்பட்டதுடன் அதையொட்டி நடந்த 17-9-45 இரவு கூட்டத்திலும் ஷை வாரால் பேசப்பட்டு தோழர் கே. வி. ராமசாமி நன்றி கூறலுடன் இனிது முடிந்தது.

---

சேலம் விக்டோரியா மார்க்கெட் மைதானத்தில் 10-9-45 மாலை 7-30 மணிக்கு தோழர் எ. சித்தையன் தலைமையில் ஒரு திராவிட மாணவர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஜனார்த்தனம், சம்பத், குழந்தைசாமி, சோமசுந்தரம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். செயலாளர் நன்றி கூறினார்.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Cutchery street, ERODE.

ரோஜா முத்தையா